


# ரமணோதயம்

ஏப்ரல் 2022
காலாண்டு

ஆராதனை இதழ்
விலை ₹ 20



## ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள்
தயவுசெய்து தங்களது சந்தாவைப்
புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச்
செலுத்தவோ செய்து
உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்

உதயம் 21 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 3

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஆராதனை இதழ்
ஏப்ரல் 2022

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20
ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
ஆ. குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஆராதனை இதழ், ஏப்ரல் 2022


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | வேதாந்த விசாரம் - அத்தியாயம்-3 | ஏ.வி. ராஜகோபாலன் | 13 |
| 3 | ஔவைக் குறள் | விளக்கம்: ராம் மோஹன் | 25 |
| 4 | சுவாமினி ஆத்மானந்தா | வி. நிரஞ்சன் | 32 |
| 5 | தலை வணங்கும் தாழ்மையால் | ஆகுரா | 40 |
| 6 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 49 |
| 7 | ரமண மையங்களை நோக்கி... | | 54 |
| 8 | சுகம்: யாது, எங்கே, எதனிடம், எங்ஙனம்? - பகவான் | டாக்டர் S. ராமகிருஷ்ணன் | 63 |
| 9 | இனிவரும் திருநாட்கள் | | 75 |
| 10 | செய்திகள் | | 76 |

# ஆசிரியர் உரை

## அக்கினிக் குன்றமும் அருட் புனலும்

அருள் நிறைவான அமுதக் கடலாய்த் திகழும் பகவான், தன் பேரருளால் ஜீவராசிகள் அனைத்தையும் அரவணைக்கும் பகவான், அதேசமயம் எதற்கும் அசையா அருணகிரியாகவும் திகழ்ந்தார். அவரது பேரன்பு பக்தர்கள் மட்டுமன்றி தாவர ஜங்கமங்கள் அனைத்தையுமே அரவணைத்து இயற்கைச் சூழ்நிலையைச் சேதமுறாது பாதுகாத்தது. இக்காலத்தில் பொருளாதார மற்றும் வர்த்தகம் சார்ந்த மேம்பாடுகள் இயற்கைச் சூழ்நிலையைச் சற்றும் கருணையின்றி அழிக்கின்றன. இந்த வரம்பற்ற சுரண்டலின் காரணமாக சூழ்நிலையும், இயற்கையும் நாசப்படுத்தப் படுகின்றது.

இந்திய சனாதன தர்மம் முழுவதிலுமே இயற்கைச் சூழ்நிலையைப் பாதுகாக்கும் கருத்துக்கள் விரவிக் கிடக்கின்றன. இத்தகைய சூழ்நிலை காக்கும் பண்புகளின் சிகரம் பகவான். சரஸ்வதி நதி தீரத்தில் 6000 ஆண்டுகட்கு முன்பே செழித்த நாகரீகத்தின் தலைமைக் கடவுளே 'பசுபதி' – விலங்குகளின் தலைவன் – என்று உணர்த்தப்படும் சிவபிரான். சரஸ்வதி-சிந்து நதி தீரத்தில் கிடைக்கப்பெற்ற மிகப் புராதானமான சிலை, இயற்கையையும் உயிரினங்களையும் பாதுகாக்கும் பசுபதியின் சிலையே. தியானத்தில் அமர்ந்திருக்கும் பசுபதியைச் சுற்றிலும் யானை, புலி, எருமை, காண்டாமிருகம், இரண்டு மான்கள் அனைத்தும் தம் பகை உணர்வை மறந்து யோகியின் சந்நிதியில் சாந்தமாக வீற்றிருக்கின்றன.

சனாதன தர்மத்தில் கைலாயம் முதல் அருணாசலம் வரை அத்தனை மலைகளும் இறைவனின் திருவாகவே வழிபடப்படுகின்றன. ரிக்வேதம் (IV.X.146) ரிக்கில் இயற்கை அன்னையே தெய்வமாக வழிபடப் படுகின்றது. அதர்வண வேதம் (IV.16), வருணன் எனும் இறைச் சக்தியின் அலைகள் உலகம் முழுவதும் பரவிப் பாதுகாக்கின்றன என்று கூறுகிறது. இந்த பூமியே தேவியின் வெளிப்பாடுதான். எனவே அனைத்தையும் மதித்துப் போற்ற வேண்டும். ஐந்து பூதங்களுமே ஒன்றாக இறையருளால் இணைக்கப்பட்டு, உலகம் என்னும் வலையை உருவாக்குகின்றன. "தர்மம் என்பது, நாம் இந்த உலகின் அனைத்து தாவர, ஜங்கமங்கள் அனைத்தையும் பாதுகாக்க வேண்டும்" என்பதே உயரிய தர்மமாகும் என்று வேதம் கூறுகிறது.

சனாதன தர்மத்தின் அடிப்படைக் கொள்கையாகிய மறுபிறவி என்பதே அனைத்து உயிர்கட்கு இடையும் நிலவும் ஆன்மிகப் பிணைப்பைக் குறிப்பதாகும்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர்ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்

என்று அனைத்து இயற்கையும், கல் போன்ற உயிரற்றவை என்று நாம் கருதும் அனைத்தையுமே, இயற்கை அன்னையின் வெளிப்பாடே என்று மணிவாசகர் கூறுகிறார்.

பௌத்த சமய நூலாகிய 'திக நிகாய'த்துள் உள்ள சக்கரவத்தி ஸஹநாத சூக்தம், மனிதனுடைய தர்ம வாழ்க்கைக்கும் இயற்கை வளங்களின் செழிப்புக்கும் உள்ள தொடர்பைக் கூறுகிறது. மனிதனின் தார்மிக வாழ்வு சீரழியும்போது, அது மனிதனின் சுகமான வாழ்விற்கும், மகிழ்ச்சிக்கும் அழிவை ஏற்படுத்துகிறது

*என்கிறது இந்நூல். The relationship between man's conduct and nature's presentation is a reciprocal cause relationship. 'சித்தேன நியதி யோகோ' என்ற புத்தர் போதனை உலகம் முழுதும் மனதினால் ஆட்சி செய்யப்படுகிறது என்கிறது. அங்குத்தர நிகயம் எங்ஙனம் மனிதனின் தார்மிகச் சீரழிவு மழை பொழிவதிலும், பயிர் விளைச்சலிலும் ஆரோக்யத்திலும் மோசமான விளைவுகளை உண்டாக்குகிறது என்று கூறுகிறது.*

*புத்தர தம்மபதம் 283-ஆவது வரியில் கூறுகிறார், ஒரு மரத்தின் கிளையோ, இலைகளோகூட நீங்கள் அழிக்கக் கூடாது. இதே கருத்தை பகவான் தேவிகாலோத்தரத்தின் நூலின் மூன்று பாடல்களின் கூறுகிறார்.*

*கிருமி கீடம்பறவை கேள்சதியே; தாரு*
*உருமுதலாம் எல்லா உயிரும் – ஒருபோதும்*
*நாசமுறச் செய்யவொணா நல்லறிஞன் உண்மையறி*
*ஆசிரயித் தோனாய் அறி.*

*(தேவிகாலோத்தரம், பாடல் 69)*

*பொருள்: தேவியே கேள்! விவேகம் உடையவன், ஞானத்தை ஆஸ்ரயித்தவன் தூய மனத்துடன் இருக்க வேண்டும். மிகச் சிறு புழு, பூச்சி முதல் மரம், செடி, கொடி, தாவரங்கள் முதலான எல்லா உயிரும் எப்போதும் எந்தவிதமான தீங்கும் அடையாதவாறு செயலாற்ற வேண்டும்.*

*வேரெதுவும் தான்பிடுங்க வேண்டாம் இலையினையும்*
*வேறுபடுத்தும் செயலும் வேண்டாமே – சீறி*
*இனாத செயவேண்டாம் எவ்வுயிர்க்கும் பூவும்*
*அனாதரவாய்க் கிள்ள வேண்டாம்.*

*(தேவிகாலோத்தரம், பாடல் 70)*

*பொருள்: மெய்யறிவுள்ள சாதகன், பூஜைக்காக எந்த ஒரு செடியின் வேரைப் பிடுங்கத் தேவையில்லை. எந்த ஓர் இலையையும் துளிரையும் எந்த உயிர்கட்குமே,*

சினத்தினாலோ, அறியாமையினாலோ துன்பம் தரும் செயல் எதுவும் செய்ய வேண்டாம். பரிவே இல்லாமல் எந்த மலர்களையும் செடிகளில் இருந்து பறிக்க வேண்டாம் என்கிறார் பகவான்.

இந்தச் செய்யுளுக்கு எடுத்துக்காட்டு பகவானின் வாழ்விலேயே அமைந்துள்ளது. ஒருமுறை பகவான் மற்றும் அடியார்களுடன், திருச்சுழியைச் சேர்ந்த லக்ஷ்மி அம்மாள் கிரிவலம் புறப்பட்டார். வழியில் அனைவரும் சோண தீர்த்தத்தில் சிறிதுநேரம் தங்கினர். அந்தச் சுனையின் கரையில் சரக்கொன்றை மரம் பூத்துக் குலுங்கி இருந்தது. அதைக் கண்ட லக்ஷ்மி அம்மா பூக்களைப் பறிக்கத் தொடங்கினார். அங்குத் திரும்ப வந்த பகவான், “லக்ஷ்மி, என்ன செய்து கொண்டிருக்கிறாய்?” என்று கேட்டார். நிறைய மலர்கள் துணியில் குவிந்து இருப்பதைப் பார்த்தார். “கீழே நிறைய மலர்கள் உதிர்ந்திருக்கே! இன்னும் ஏன் பறிக்கிறாய்?” என்றார். லக்ஷ்மி அம்மா, ‘இவ்வளவு பூத்து உள்ளதே! அத்தனையும் வீணாய்த்தானே போகும். அதான் பறிக்கிறேன்!’ என்றார். உடனே ‘சினம் பயின்ற’ பகவான், “ஆமாம்! நீதானே செடிகட்கு தண்ணீர் ஊற்றி வளர்த்திருக்கே. அது பூத்துக் குலுங்கும் அழகெல்லாம் நீ பார்த்து விட்டாய். வேறு எவரும் பார்க்க வேண்டாமோ? அதை மொட்டை அடிச்சிடு. அதுதான் பூஜைக்குப் பலன்” என்றார். லக்ஷ்மி அம்மா தன் தவறை உணர்ந்தார்.

மற்றொரு சமயம் பகவான் தனது கூடத்தில் இருந்து கோபாவேசமாய் வெளியே வந்தார். கடுஞ்சொல் அறியாத, முன்பு திருடர்களிடம் தாமே அடிபட்டபோதும் சிரித்துத் தாங்கிக்கொண்டு போலீஸுக்கு அடையாளம் காட்டாத பகவானா இப்படிக் கோபப்படுகிறார்? எப்படி என்னதான் நடந்தது!

பகவான் அறைக்கு வெளியே ஒரு மாமரம் இருந்தது. அணுக்கத் தொண்டர் ஒருவர் மரத்தின் பழங்களைப் பறிக்கத் தொடங்கினார். எப்படித் தெரியுமா? கீழே இருந்து பெரிய தடியினைக் கொண்டு வேகமாக அடித்துப் பழங்களைப் பறித்துக் கொண்டிருந்தார். கனிகள் மட்டுமன்றி, காய், பூ, பிஞ்சு மற்றும் இலை எல்லாமே அடிபட்டு உதிர்ந்தன.

கோபாவேசமாக வந்த பகவான், "ஒரு பிரதிபலனும் எதிர்பாராமல் பழமளிக்கும் மரத்தை இப்படியா அடிப்பது? இது நன்றி கெட்டத்தனம். தடியால் அடித்துக் கொத்துக் கொத்தாக பச்சை இலை, பிஞ்சு என அனைத்தையும் விழும்படி செய்து விட்டீர்களே. பழம் வேண்டும் என்றால் மரத்தில் ஏறி பழத்தை மட்டும் பறித்தால் போதாதா? இப்படியா கண்மூடித்தனமாக தாக்குவீர்கள். உங்கள் பழங்கள் எதுவும் எனக்கு வேண்டவே வேண்டாம்" என்று மறுதலித்தார்.

அதேபோல் மற்றொரு நிகழ்ச்சி, பகவான் விரூபாக்ஷ குகையில் இருந்தபோது நடந்தது. பக்தை எச்சம்மாள் அவரது வீட்டில் லக்ஷார்ச்சனை செய்ய விரும்பினார். புஷ்பம், அக்ஷதை, குங்குமம் இல்லாமல் வில்வம் போன்ற துளிர்களாலேயே அர்ச்சனை செய்வதாக சங்கல்பம். அது கடுங்கோடை காலம். மலையின் வெப்பத்தால் துளிர் கிடைப்பது அரிதானது. எச்சம்மாள் மலைமீது அலைந்து திரிந்து கண்ணுக்குப் புலப்பட்ட பசுந் துளிர் ஒன்றையும் விடாமல் பறித்துக் கொண்டு விரூபாக்ஷ குகை திரும்பினார். பகவானிடம் தன் கடும்முயற்சி குறித்து ஆறுதல் வார்த்தை வரும் என்று எண்ணி நின்றார்.

ஆனால் அந்த அருள் மலை வாயிலிருந்து வந்த அனல் பொறிகள், "மரங்களில் இருந்து ஒரு கொழுந்து விடாமல் பறித்து விட்டாயே? வில்வ பத்திரம் கிடைக்கா விட்டால் என்ன? உன்னையே கிள்ளிக்

கிள்ளி அர்ச்சனை செய்வது தானே?" என்று கடுஞ் சொற்கள் கூறினார் பகவான்.

'ஐயோ! அப்போது வலிக்காதா?' என்றார் அம்மையார். "சரி! உன் உடம்பைக் கிள்ளிக் கொண்டால் உனக்கு வலிக்குமென்றால், மரம் செடி கொடிகட்கெல்லாம் கொழுந்தைக் கிள்ளினால் வலிக்காதா?" என்றார் பக்வான்.

எச்சம்மாள், 'முதலிலேயே ஏன் சுவாமி எனக்குக் கூறவில்லை?' என்றார்.

"நான் எதற்குக் கூற வேண்டும்? உடம்பைக் கிள்ளினால் உனக்கு வலிக்கும் என்று நான் சொல்லியா உனக்குத் தெரிய வேண்டும்! அதேபோல் செடி கொடிகட்கும் வலிக்கும் என்று உனக்குத் தெரிய வேண்டாமா?" என்றார் பகவான்.

**யோ மாம் பஶ்யதி ஸர்வத்ர ஸர்வம் ச மயி பஶ்யதி!**
**தஸ்யாஹம் ந ப்ரணஶ்யாமி ஸ ச மே ந ப்ரணஶ்யதி!!**

என்று கண்ணன் கூறுவதும் இந்த உபதேசமே.

எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும்
தம் உயிர்போல் எண்ணி உள்ளே
ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார்
யாவர் அவர் உளந்தான் சுத்த
சித்துருவாய் எம் பெருமான் நடம்புரியும்
இடம். . . . (திருவருட்பா, 5298)

என்று வள்ளலாரும் விளக்குகின்றார் அல்லவா?

**யா ப்ரம்ஹேதிபிபீலிகாந்ததநுஷு ப்ரோதா ஜகத்ஸாக்ஷிணீ ।**

என்று சங்கரர் கூறுகிறார்.

சிற்றெறும்பிலிருந்து ப்ரம்மதேவன் ஈறாக அனைத்திலும் ஒளிர்வது ஒன்றே என்பது அவர் உபதேசம். சிற்றெறும்பிலிருந்து சிறுத்தை வரை அனைத்து உயிர்களும் பகவானின் கடல்போன்ற பரிவைப் பெற்றன. ஆஸ்ரமம் வந்த பெண்டிர்

அழகான இழைக் கோலங்கள் போட்டபோது, அதன் ஓர் இழையைக் கூட மிதிக்காமல் வந்தார். அதேசமயம் இங்ஙனம் அரிசிமாவினால் தரையோடு தரையாக ஒட்டி இழைக்கோலம் போட்டால் எறும்பு எப்படி அதைத் தின்ன முடியும் என்று எண்ணினார். அரிசிப் பொடியால் போட்ட மாக்கோலத்தை விடுத்து கோலப் பொடியால் கோலமிட்டபோது இதை எறும்புகள் சற்றும் உண்ண முடியாதே என்று எண்ணி வருந்தவும் செய்தார்.

குரங்கோ, அணிலோ எந்த ஜீவராசியானாலும் அவற்றினை 'அது' என்று அஃறிணையில் அழைக்காமல் 'அவன்', 'அவள்', 'பசங்கள்' என்றுதான் சொல்வார்.

முதலில் பகவானை வேறாக நினைக்கும் பக்தி, பின்னர் அவனே ஆகிவிடும். ஞானம் அதற்குப்பின் 'அவனே எல்லாமே' என்னும் உணர்வான 'ஞானோத்தர பக்தி'; இதையே பகவான் விளக்குகிறார். 'ஞானோத்தர பக்தி' அக்ஷரமணமாலை வழியாய் வெளிப்படுவது மட்டுமன்றி ஞானோத்தர கருணையும் தன் செயல்கள் மூலம் பகவான் வெளிப்படுத்துகிறார். 'பகவானே! இந்தப் பறவைகளும், விலங்குகளும் சிரமப்படுவது கண்டு, ஞானியின் கண்களில் கண்ணீர் பெருகுகிறதே!' என்று பக்தர் கேட்டார். அதற்கு "கருணைக் கண்ணீர் பெருகுவதே ஞானியின் ஸ்வபாவம். பல சமயங்களில் ஞானி அதனை அடக்கிக்கொண்டு, வெளிப்படுத்தாமல் இருக்கிறான்" என்றார் பகவான்.

**"உனை எனதுள் அறியும் அன்பைத் தருவாயே"**

என்று பாடுகிறார் அருணகிரிநாதர்.

ஞானியின் அன்புப் பெருக்கு எங்ஙனம் நிகழ்கிறது?

**பவ்வ வெண்திரை கொழித்த தண்தரளம்**
**விழி உதிர்ப்பமொழி குளறியே**
**பாடி, ஆடி, உள்உடைந்து, உடைந்து, அழுது**
**பாவைஒத்து அசைதல் இன்றியே**

*திவ்ய அன்பு உருவமாகி அன்பரொடும்*
*இன்ப வீட்டினில் இருப்பனோ*

என்று தாயுமானவர் பாடுகிறார்.

பொருள்:

பவ்வம்=கடல்; வெண்திரை=அலைகள் தரளம்=முத்து;

அலைவீசும் கடலில் இருந்து தரப்பட்ட முத்துக்களைப் போன்று கண்ணீர் முத்துக்கள் உதிர அன்பின் பெருக்கால் மொழி குளறி, பாடி, ஆடி மனக் கட்டுக்கள் எல்லாம் உடைந்து உடைந்து அதன்பின்னர் ஒரு பொம்மை போன்று அசைதல் சற்றுமின்றி நிலையாய் நின்று அன்பே உருவமாகி, இன்பப் பெரு வீட்டில் நிலைபெற்று இருப்பதே ஞானோத்தர பக்தியின் இறுதி நிலை அல்லவா?

பகவானுக்கும் இயற்கைக்கும் உள்ள இடையறாத் தொடர்பு இணையற்றது. தலைசிறந்த பகவான் பக்தையின் மறுபிறவியாகக் கருதப்பட்ட பசு லக்ஷ்மி, அநேகமாகத் தன் குழந்தைகளை பகவானின் ஜயந்தி தினத்தன்றே ஈனுவாள். வழக்கமாக மிகச் சாந்தமாக பகவானைக் காண வரும் லக்ஷ்மி ஒருநாள் சாணியும் சகதியுமாக பகவானின் அறைக்கே வந்து விட்டாள். ஏன் இப்படி அவசரமாக வந்துள்ளாள் என்று ஆராய்ந்த பகவான் லக்ஷ்மியைத் தேற்றினார். ஏனெனில், அன்று முதல்முதலாக லக்ஷ்மிக்கு மூக்கணாங்கயிறு போட முயன்றனர். அது லக்ஷ்மியின் மூக்கில் உரசி ரத்தம் வந்து விட்டது. உடனே லக்ஷ்மி பகவானிடம் முறையிட ஓடி வந்து விட்டாள். பகவான் அவளுக்கு வாழைப்பழம், இட்லிகள் தந்து சமாதானப்படுத்தினார்.

'அதிசயமாக ஏன் லக்ஷ்மி இன்று வேகமாக ஓடி வந்து விட்டாள்?' என்று வினவிய அன்பருக்கு, "நம் குழந்தை, அடிபட்டு விட்டால் அது ஒப்பனை செய்து கொண்டா அன்னையிடம் ஓடிவரும்? அதைப்போல தனக்குத்

*துன்பம் வந்தவுடனே, என்னிடம் ஓடி வந்து விட்டாள்" என்றார் பகவான்.*


*இங்ஙனம் ஞானோத்தர பக்தியின் கொடுமுடியான பகவான், அனைத்துள்ளும் நிறைந்து நின்று அதேசமயம் அனைத்து உயிரையும் அன்பால் அரவணைத்தவர்.*

*தாயுமானவர் கூறுவதுபோல்,*

*தன்னை ஒருவர்க்கு அறிவரிதாய்த்*
*தானே தானாய் எங்குநிறைந்து*
*உன்னற்குஅரிய பரவெளியாய்*
*உலவா அமுதாய் ஒளிவிளக்காய்*
*என்உள் கலந்தாய் யான்அறியாது*
*இருந்தாய் இறைவா இனியேனும்*
*நின்னைப் பெருமாறு எனக்குஅருள்ஆம்*
*நிலையைக் கொடுக்க நினையாயோ.*

*(தாயுமானவர், தன்னையொருவர்-1)*

*நான் என்னும் தன்முனைப்பு இருக்கும்வரை நூலறிவால் அறிய முடியாததாய் உள்ளவன் நீ. 'அஹம் ப்ரம்மாஸ்மி' 'தானேதான்' என்ற பரப்பிரம்ம நிலையில் எங்குமாய்ப் பரந்து உள்ளாய். (எங்கும் பரந்து இருந்தாலும்) நம் மனத்தைக் கொண்டு தேடும்போது கண்டுபிடிக்க முடியாத சிதாகாசப் பரவெளியாய், என்றும் அழியாத அமுதமாய் உள்ளாய். என் ஆன்மாவாகிய ஒளி விளக்காய் அமர்ந்துள்ளாய். 'நீ வேறு எனாது நான் வேறு எனாது' என்னுள் இரண்டறக் கலந்து உள்ளாய். அதேசமயம் என் முற்றுப் பெறாத அறிவால் இப் பேருண்மையை நான் அறியாது இருப்பதையும் நீ அறிவாய். இது உன் திருவிளையாடல் ஆன திருவிதானம் அல்லவா! இனிமேலாகிலும் நான் உன்னை முற்றிலும் என்னுள் பூர்ணமாய் உணரும்படி அருள் நிலையைத் தருவாய்! என தாயுமானவர் வேண்டுகிறார்.*



பகவானின் ஆழ்ந்த மொழிபெயர்ப்பாகிய அத்தாமலக ஸ்தோத்திரத்தின் ஆறாவது பாடலில் பகவான் கூறுகிறார்.

*அத்தமே இல்லை யாகி லம்முக ஆபாசம் இன்று*
*வத்துவாய் உற்ற தேக வதனமே விகற்பம் இன்றி*
*புத்தி அற்றிடவே யாவன் பொலிவன் ஆபாசம்இன்றி*
*அத்திற நித்த சித்தனாய்உள அவ்வான்மா நான்.*

பொருள்: பிம்பம் ஆடியில் பிரதிபலிக்கும்போது பிரதிபிம்பம் தோன்றுகிறது. அக் கண்ணாடி இல்லை என்றால் அதில் தோன்றக் கூடிய பிரதி பிம்பமும் இல்லை. ஆதார வஸ்துவாகிய பிம்பம் மட்டுமே இருக்கும். அதேபோன்று (பிரதிபலிக்கும் கண்ணாடி போன்ற) புத்தி (அல்லது அஹங்காரம்) அழிந்துபடும்போது பூர்ணவஸ்துவாகிய ஆத்மா ஒன்றே உள்ளது. அத்தகைய என்றும் மாறாத சுத்தசித் வஸ்துவாகிய ஆத்மாவே நான்.

நம்முடைய பிரதிபலிக்கும் கண்ணாடியான மனம் ஆத்ம விசாரத்தால் அழிபடும்போது, என்றும் உள்ள ஆத்மா உபாதிகள் நீங்கி சத்வஸ்துவாகப் பிரகாசிக்கின்றது என்று விளக்குகின்றார் பகவான்.

உரையாடலை மீண்டும் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

# வேதாந்த விசாரம்

## அத்தியாயம் - 3

## ஞான பாரம்பரியம்

### டாக்டர். ஏ.வி. ராஜகோபாலன்

*ஆரவாரமான சென்னை நகரிலிருந்து ஐம்பது கிலோமீட்டர் தொலைவிலுள்ளது அந்த வேதாந்த குருவின் ஆஸ்ரமம். அவர், இந்திய-மேற்கத்திய வேதாந்தங்களில் டாக்டர் பட்டம் பெற்றவர். தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம் போன்ற பன்மொழி வித்தகர். சிஷ்யர்கள் மத்திய வயது கிரஹஸ்தர்கள்; ஆன்மீக நாட்டமுடையவர்கள்.*

*முந்தைய அத்தியாயங்களில் 'ஞானி யார்?' மற்றும் 'ஞானியின் சூழல்' என்ற விசாரம் நடைபெற்றது.*

*சிஷ்யர்கள்:* நம்முடைய ஞான விசாரம் எப்பொழுது துவங்கியது?

*குரு:* இது மிகவும் பழமையானது. இதன் துவக்கம் வேதங்களே ஆகும். அவை நான்காக வகுக்கப் பட்டன. ருக், யஜுர், சாம, அதர்வணம் என அவை அழைக்கப்படும்.

*சிஷ்யர்கள்:* இவற்றை இயக்கியவர் யார்?

*குரு:* அப்படி யாரையும் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது. இவை மனிதர்களால் இயற்றப் படவில்லை என்பது நம் ஐதிகம். அதனால் இவை அபௌருஷேயம் என அழைக்கப்பட்டன.

இதை சில மஹரிஷிகள் தங்கள் ஆன்மிக உணர்வால் கண்டறிந்தனர். அவர்களை 'மந்த்ர த்ருஷ்டார:' என்று அழைக்கிறார்கள். அதன் பொருள் 'மந்திரத்தைக் கண்டவர்கள்' என்பதாகும். அதனால் அவர்கள் இவற்றின் படைப்பாளிகள் என்றோ ஆசிரியர்கள் என்றோ சொல்ல முடியாது. ஆகாயத்தில் அதை ஒளிக்கீற்றாக உணர்ந்து, அதை உள்வாங்கியவர்கள் இந்த மகனீயர்கள். பின்னர் அதற்குச் சொல்வடிவம் அளித்தனர். இவ்வாறாக வேதங்கள் நமக்குக் கிடைத்தன.

இந்த வேதங்களுக்குக் கால நிர்ணயம் செய்வது கடினமான கார்யம். நம் பாரம்பரியம் இந்த முயற்சியில்கூட இறங்கவில்லை. இவற்றை 'அநாதி' அதாவது 'ஆரம்பம் அற்றவை' என்றே முன்னோர் அழைத்தார்கள். ஆங்கிலேயரின் அவசர சரித்திரக் கணிப்பில் இவை கி.பி. 1500 காலகட்டத்தில் தோன்றியவை என்று குறிக்கப் பட்டன. இதைப் பற்றி வேறு பல காலக் கணிப்புகளும் உள்ளன. மொத்தத்தில் இவை மிகப் பழமையானவை என்பது உறுதி.

> *சிஷ்யர்கள்:* ஓலையும் எழுத்தாணியும் இல்லாத அந்தக் காலகட்டத்தில் இவற்றை எப்படிப் பாதுகாத்துப் பரப்பினார்கள்?
>
> *குரு:* அது நம் முன்னோர்கள் செய்த மாபெரும் அதிசயம். இதற்காக அவர்கள் பட்ட பாடு எழுத்தில் சொல்லி மாளாது. இதைக் கர்ண பரம்பரையாகவே காப்பாற்றினார்கள். அதனால் இவை ஸ்ருதி (கேட்கப்பட்டது ???) என்று அழைக்கப் படுகின்றன.

இவற்றை குரு-சிஷ்ய பாரம்பரிய முறையில் சொல்லிக் கொடுக்கப்பட்டன. இவற்றின் ஒரு அக்ஷரம்கூட மாறாது காக்க வேண்டும் என்ற மிகப் பெரும் முயற்சியால் அவை இன்றளவும்

*'பாடபேதம்' என்னும் இடைச்செருகல் இல்லாமல் வழக்கில் உள்ளன. இதற்காக அவர்கள் பலவித பாடக்கிரமங்களைப் பின் பற்றினார்கள்.*

1. *மூலத்தை அப்படியே சொல்வது 'சம்ஹிதா பாடம்'.*
2. *ஒவ்வொரு பதத்தையும் பிரித்துச் சொல்வது 'பத பாடம்'.*
3. *முதல் சொல் + 2வது சொல்; பிறகு 2+3; பிறகு 3+4 என்று சொற்களை மீண்டும் சொல்வது 'கிரம பாடம்'.*
4. *இதைத் தவிர பதம் 1+2; பிறகு பதம் 2+1; பிறகு பதம் 1+2. இதன் பிறகு இதே கிரமத்தில் 2+3; 3+2; 2+3 என்று ஒவ்வொறு சொல்லையும் இது 'ஜடா பாடம்'*
5. *இதேபோல வேறு பல வகைகள் உண்டு.*
6. *சிகரம் வைத்ததுபோல உள்ளது 'கனபாடம்'. இது மிகவும் கடினமான விதம். பதம் 1+2; பதம் 2+1; பதம் 1+2+3; பதம் 3+2+1; பதம் 1+2+3 என்று ஒவ்வொரு மந்திரத்தையும் ஓத வேண்டும். இந்தப் பயிற்சி பெற்றவர்கள் கனபாடிகள் என அழைக்கப் பட்டனர்.*

*இந்த மாபெரும் முயற்சியால் காலப்போக்கில் மாறாது இருக்க வழிவகுத்தனர். இன்றளவும் நம்மால் வேதத்தை எந்த வித மாற்றமும் இன்றி ஒரு 5000 ஆண்டு பாரம்பரியத்தின் கடைசித் தலைமுறையாக பயில முடிகிறது.*

> *சிஷ்யர்கள்:* மாபெரும் செயல்தான். இந்தப் பண்டித பரம்பரை நம் மதிப்பிற்குரியவர்களே. நீங்கள் இவ்வளவு விரிவாக இதை விளக்குவதற்குக் காரணம் எதாவது குறிப்பாக உண்டா?

*குரு: ஆமாம். பின்னால் தோன்றிய வால்மீகி, கம்ப இராமாயணங்களிலும் வேறு பல நூல்களிலும், மூலம் எது, இடைச்செருகல் எது என்ற விவாதம் இன்றளவும் நடக்கிறது. வேதங்களில் அந்தப்பிரச்சினை இல்லாதிருக்கக் காரணம் இந்தக் கட்டமைப்புதான். அதை நீங்கள் உணர வேண்டும் என்றுதான் இவ்வளவு விரிவாகச் சொன்னேன்.*

பின்னர் வந்த உபநிஷதங்கள் பெரும்பாலும் குரு-சிஷ்ய சம்வாத முறையில் அமைந்தன. வேதத்தின் வரிகள் சில, இவற்றிலும் காணப்படுகின்றன. உதாரணமாக முண்டக உபநிஷதத்தில் வரும் 'த்3வா சுபர்ணா ஸயுஜா சகா2யா' - என்னும் வரிகளைச் சொல்லலாம். இந்த வரிகளில் பரமனும் பக்தனும் நெருங்கிய நண்பர்களாகக் காட்சி அளிக்கிறார்கள். வேத-உபநிஷத காலகட்டத்தில் இறைவனுக்கும் பக்தனுக்கும் இருக்கும் உறவு மிகவும் நெருங்கியது, அந்தரங்கமானது. அது ஒவ்வொரு பக்தர் விஷயத்திலும் தனித்தன்மை பெற்று விளங்கும். அழகான ஒரு வேத மந்திரம் இறைவனை மிகச் சுருக்கமாக விளக்குகிறது.

'இன்பமயமான அந்த ஆண்டவனை மகிழ்ச்சியான மனங்களுடன் வணங்குகிறோம் (ருக். 8.43.31)

அடியாருக்கு அவனுடன் எத்தகைய உறவு முறை என்பதற்கும் விளக்கம் கிடைக்கிறது.

'அவன் என் நண்பன்; என் தந்தை; அவன் சாதாரணத் தந்தை மட்டுமல்ல அவன் தந்தையர் அனைவருக்கும் சிறந்த தந்தை. அவன் பக்தனுக்கு உயர்ந்த வாழ்வை அளிப்பவன்; ஏன் உலகத்தையே தரக் கூடியவன்.'

இதில் வரும் சொற்கள் அழகானவை.

ஸகா2 பிதா பித்ருதமஹ் பித்ருணாம். (ருக் 4.17.17)

அந்த வேதகால பக்தன் இறைவனை எவ்வாறு நோக்கினான் என்பதற்கு இந்த சுலோகம் அழகான ஒரு உதாரணம். தந்தை என்பவன் காப்பாற்றுபவன். இறைவனோ, இதனின்றும் மேம்படுகிறான். அவன் 'தந்தை குணம் படைத்தவர்கள் அனைவரிலும் தலைசிறந்தவன்' என்கிறது வேதம். ஆகையினால் நம்மை நிச்சயமாகக் காக்கக் கூடியவன்.

> *சிஷ்யர்கள்:* நாம் கருதுவதுபோல அவர்கள் ஆண்டவனைக் கண்டு அஞ்சவில்லை என்று தெரிகிறது. இதற்குக் காரணம்?

> *குரு:* அவர்களிடம் ஆசைகள் குறைவு. எளிமையான வாழ்வு, மகிழ்ச்சியான மனம், அளவான தேவைகள் - என்ற கட்டுப்பாட்டுடன் இருந்தனர். அதனால் பயம் இல்லை என்று நினைக்கிறேன்.

> *சிஷ்யர்கள்:* பழமையான உலகம் சுகமாக இருந்திருக்கும் போலத் தோன்றுகிறது!!

இந்த அழகிய தொடர்பை பின்னர் தோன்றிய இதிஹாச-புராணங்களிலும் பார்க்கலாம். ராமாயணத்தை எழுதியவர் வால்மீகி. இவரே உலகின் முதலாம் காவியத்தைப் படைத்தவர். அதனால் ஆதிகவி என அழைக்கப்படுகிறார். ஆனால் ராமாயணத்தின் ஆரம்பத்தில் இவரே ஒரு பாத்திரமாக வருகிறார். பாலகாண்டத்தின் முதல் சர்கத்தில் நாரதர் ராமாயண கதையை இவருக்கு உபதேசம் செய்கிறார். அதன் அடிப்படையில் இவர் காவியத்தை இயற்றுகிறார். இங்கும் இந்த நூல் நாரதர் என்னும் இறைவடிவால் ஆரம்பம் பெறுகிறது. பகவத்கீதையில் உபதேசம் முழுவதுமே இறைவனால்தான். இதில் ஒரு சூக்ஷ்மம் உண்டு. ராமாயணத்தின் முதற் சொல் தப:. பகவத்கீதையில் முதற் சொல் த3ர்மக்ஷேத்ரே நம் சித்தாந்தத்தின் மிக முக்கியமான இவ்விரு கிரந்தங்களும்

1. தபஸ் - எனப்படும் ஒருமுகப்படுத்தி இறைவனை உள்ளே பார்த்தல்

2. தர்மம் - என்னும் அற நெறியில் வாழ்தல்

என்னும் இரண்டு அடிப்படை வேதகால போதனைகளை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. பின்னர் வந்த பாகவதம் போன்ற புராணங்களும் இறை அருள் பெற்ற ஒரு குருவின் மூலமாக உபதேசிக்கப் படுகின்றன.

*சிஷ்யர்கள்:* இந்த இறையருள் என்னும் உந்து சக்தியை பிற்காலத்தில் தோன்றிய நூல்களில் பார்க்க இயலுமா?

*குரு:* நிச்சயமாக. குறிப்பாக சைவ பக்தி இலக்கியத்தில் இது அழகாக வெளிப்படுகிறது.

ஞானசம்பந்தர் சைவத்திருமுறை ஒன்று, இரண்டு, மூன்று ஆகியவற்றின் ஆசிரியர். கருத்துகள் மிகப்பெரியவை; எழுதியவரோ சின்னஞ் சிறு பாலகன். எப்படி சாத்தியமானது? உலகின் தாயாகிய உமாதேவியின் ஞானப்பால் என்னும் அருளால் அன்றோ!!

நாவுக்கரசர் பல்லவ மன்னரால், 'நான் நாட்டுக்கரசன்; நீவிரோ நாவுக்கே அரசர்' எனப் பாரட்டப்பட்டவர். சமண மதத்தில் ஈடுபாடு கொண்ட இவரை சைவத்தின்பால் ஈர்க்க சூலை நோய் என்னும் துன்பத்தை அளிக்கிறான் இறைவன். அவர் தமக்கையின் வழிகாட்டலால் சிவனருள் பெறுகிறார். திருமுறைகள் 4,5,6 இவர் பாசுரங்களால் பொலிவடைந்தன.

சுந்தரர் மாறுபட்டவர். கொஞ்சம் சண்டைக்காரர். ஆனால் பெரும் பக்தர். அவரைத் தடுத்தாட்கொள்ள இறைவனும் சற்று வம்பு செய்கிறான். அதுவும் எந்த சமயத்தில்? அவருடைய திருமண நாளில். 'நீ என் அடிமை' என்று சாஸனம் ஒன்றைக் காட்டி

*திருவிளையாடல் செய்து பின்னர் பக்தனாக ஏற்கிறான். அவரைத் தேவாரப் பதிகங்களைப் பாட அடியெடுத்தும் கொடுத்து அருள் பாலிக்கிறான். 'பித்தா' என்று துவங்கும் இப்பாசுரங்கள் சைவத் திருமுறை வரிசையில் 7-ஆம் திருமுறையாக உள்ளன.*

*திருவாதவூரார் அற்புதமான பக்தர். இறைவனே 'மாணிக்கவாசக' என்று அழைக்க இவர் பெயர் மாணிக்கவாசகர் ஆயிற்று. பக்தரை அரவணைக்கும் அந்த அற்புத சிவனென்னும் அன்பு தெய்வம் இளையோன் வடிவில் இவர்முன்வந்து 'நீங்கள் சொல்லச் சொல்ல உங்கள் அற்புதப் பாடல்களை நானே எழுதுகிறேன்' என்று வேண்ட அவ்வாறே திருவாசகம், திருக்கோவைப் பதிகம் எழுதப்பட்டன. ஆனால் வாதவூராருக்கு மகிழ்ச்சி நிலைக்கவில்லை. எழுதியவுடன் ஓலைச் சுவடிகளுடன் அவர் மறைந்து போகிறார். அனைவரும் திகைத்து நிற்கின்றனர். மறுநாள் காலை தில்லைச் சிதம்பரனார் கோயில் ஆலய அர்ச்சகர், கோவிலைத் திறந்தபோது ஆலயப்படிகளில் ஓலைச் சுவடிகளைக் காண்கிறார். அதன் இறுதியில், 'திருவாதவூரார் சொல்ல அழகிய சிற்றம்பலமுடையோன் எழுதியது' என்ற விளக்கம்!!*

*எழுதியவர் பெயர் 'அழகிய சிற்றம்பலமுடையோன்' என்ற குறிப்பைக் கண்டு அனைவரும் வியக்கின்றனர். அந்த நூலின் உட்பொருள் சிவபெருமானே என விளக்கி அந்த ஜோதியுடன் ஐக்கியமாகிறார் மணிவாசகர். இதுவே 8-ஆம் திருமுறையாக இன்றும் படிக்கப்படுகிறது.*

*பெரிய புராணம் சைவத்தின் 63 நாயன்மார்களைப் பற்றிய நூல். மிகவும் ஏற்றம் படைத்த இந்த நூல் 12-ஆம் திருமுறையாக வைத்து எண்ணப்படுகிறது. இதன் துவக்கத்தில் இறைவன் 'உலகெலாம்' என்று முதலடி எடுத்துக் கொடுக்க, அதைப் பெற்று*

*சேக்கிழார் பெருமால் நாயனார், 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்' என்று நூலைத் தொடர்கிறார்.*

*தமிழ் மொழியில் மட்டுமல்ல இந்த இறையருள் தாக்கம். சம்ஸ்கிருதத்திலும் இதைக் காணலாம். ஆதிசங்கர பகவத்பாதர் திருச்செந்தூர் செல்கிறார். அங்கு உறையும் முருகனின் எழில் கொஞ்சும் முகத்தைக் காண்கிறார். அவனைப் போற்றிப் பாட விரும்புகிறார். அத்வைதத்தின் எல்லையைக் கண்ட அந்த அறிவுப்பெட்டகத்துக்கு மெய்மறந்த அந்த நிலையில் எந்தச் சொல்லும் வரவில்லை. மனம் முருகனையே நாட அவரையும் அறியாமல் ஸ்லோகங்கள் வரத்தொடங்கின. "நான் சொல்லறியேன், அதன் பொருளறியேன். ஆனால் முருகனிடம் ஈடுபட்ட என் உள்ளத்திலிருந்து என்னையும் அறியாமல் வார்த்தைகள் வருகின்றனவே!! இது என்ன விந்தை!!!", என்று நினைக்கிறார். அதுவே 'சுப்ரமண்ய புஜங்கம்' என்னும் அழகிய தோத்திரமாக வருகிறது. இது முருகன் அருளால் நிகழ்ந்த ஆன்மிக ஒளிப்பெருக்கு.*

> *குரு; அப்படியே பேச்சுவாக்கில் சிவபெருமானிடமிருந்து அவர் மகன் பக்கம் வந்து விட்டோம். இனி இந்த முருகனின் அருளால் நிகழ்ந்த மற்றும் சில விந்தைகளைப் பார்ப்போம்.*

*கச்சியப்ப சிவாச்சாரியார் சிறந்த முருக பக்தர். 12-13-ஆம் நூற்றாண்டுகளில் காஞ்சியில் வாழ்ந்தவர். குமரக்கோட்டம் என்னும் முருகனுடைய ஆலயத்தில் அர்ச்சகராகத் திருப்பணியாற்றியவர். அவரிடம் பலரும் கந்த புராணத்தை அழகிய தமிழ்க்காப்பியமாக ஆக்கித்தர வேண்டினர். 13,000 சுலோகங்கள் கொண்ட ஸ்காந்தம் என்ற நூலை அடிப்படையாகக் கொண்டு தமிழில் காவியம் இயற்ற இறைவன் அருளை நாடினார். அச்சமயம் அசரீரியாக 'திகட சக்கரம்' என்ற சொல் கேட்டது. அதையே முதலடியாகக் கொண்டு*

11,345 பாடல்களைக் கொண்ட கந்த புராணம் என்னும் உன்னத காவியத்தைப் படைத்தார். அதை முறைப்படி அரங்கேற்றம் செய்ய குமரக் கோட்டத்தில் ஏற்பாடாயிற்று.

முதற்பாடலைப் படித்தார்.

திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்

உடனே அதற்கு எதிர்ப்பு கிளம்பியது. திகட சக்கரம் என்பதற்கு திகழ் தசக்கரம் என்று பதவுரை இலக்கணப்படி தவறு என்று அவரிடம் பொறாமை கொண்ட சிலர் ஆக்ஷேபித்தனர். முருகனே தினமும் பரிசீலித்து ஒப்புதல் அளித்த நூலிலா பிழை? கச்சியப்ப சிவாச்சாரியார் சிறிது தயங்கி மறுநாள் விடையளிப்பதாக கெடு வாங்கிக் கொள்கிறார்.

அடுத்தநாள். சபையில் ஒரு இளம் புலவர் வந்திருந்தார். சோழ தேசத்தில் வழக்கில் இருக்கும் 'வீர சோழீயம்' என்னும் நூலில் சந்திப் படலத்தில் அதற்கு விளக்கம் அளித்தார். அனைவரும் ஏற்றுக்கொண்டனர். இவ்வாறு முருகன் அடியெடுத்துக் கொடுத்ததுமல்லாமல் அதற்காக வாதாடியும் அந்த நூலை அரங்கேற்றினான் என்பது, உபதேச ரத்னாகரம் எனப் போற்றப்படும் இந்த நூலின் பெருமை. கம்ப ராமாயணத்துக்கு இணையான இந்த அற்புதக் காவியம், இலக்கியம்-தத்துவம் என இரண்டும் பிணைந்து காணப்படும். அறிஞர்களுக்கு சிறந்த விருந்து.

அடுத்ததாகக் கொஞ்சம் சமீபகாலத்துக்கு வருவோம். முருக பக்தர்களில் சிறந்தவர் அருணகிரிநாதர். இளம் பிராயத்தில் பலவித கெட்ட பழக்கங்களால் ஈர்க்கப்பட்ட இவர், வீட்டைவிட்டு வெளியேறவேண்டிய சூழல் ஏற்படுகிறது. வழியில் ஒரு முதியவர் 'சரவணபவ' என்ற

*சொல்லின் உட்பொருளை விளக்குகிறார். ஆனால் அவர் இருந்த மனநிலையில் அதை அருணகிரிநாதர் சரிவர அறியமுடியவில்லை. தியானம் செய்து பார்க்கிறார். மனம் நிலைக்க மறுக்கிறது. வெறுத்துப் போகிறார். இனி வாழ்ந்தென்ன என்ற காழ்ப்புணர்ச்சி தோன்ற திருவண்ணாமலை ஆலயத்தில் தவம் செய்ய முயன்று தோல்வியுற்ற நிலையில், அந்தக் கோபுரத்திலிருந்து விழுந்து உயிரை மாய்த்துக்கொள்ள முயலுகிறார்.*

*அச்சமயம் அந்த அற்புதம் நடக்கிறது. 'நில் அருணகிரி' என்ற இறைக்குரல் கேட்கிறது. அவரைத் தன் இரு கரங்களிலும் தாங்கிக் கொள்கிறான் முருகன். திகைத்து நின்ற அவரை 'அருணகிரிநாதரே' என்று அன்புடன் அழைக்கிறான் குமரன். ஆறெழுத்து மந்திரத்தை வேலால் அவர் நாவில் தடவுகிறான். 'எம்மைப் பாடுக' என்று அன்புக் கட்டளை இடுகிறான். பாடல் இயற்றத் தெரியாமல் இவர் திகைத்து நிற்க, 'முத்தைத் தரு பத்தித் திருநகை' என முதலடி எடுத்து அருளுகிறான் அந்த பக்த ரக்ஷகன். பிறகு என்ன. கவிதை மழையால் அந்த முருகனையும் நம்மையும் நனைக்கிறார் அந்த பக்தர்.*

> *சிஷ்யர்கள்: சந்தம் என்பதற்கு இலக்கணமே இவருடைய பாடல்தானே?*
>
> *குரு: சந்தேகமென்ன? மிக உயர்ந்த பக்தி பாவம். அதற்குக் காரணமாக அந்தக் குமரனே அமைந்தது அழகு.*

*நம்முடைய ஆன்மிகம் இறைவனுடன் தொடர்புடையது மட்டுமல்ல், அது இறைவனால் துவக்கப்பட்டது என்பதை பல உதாரணங்கள் மூலமாகப் பார்த்தோம். இந்த உணர்வு நமக்கும் அந்த அளவிடமுடியாத பரம்பொருளுக்கும் இடையே உள்ள தூரத்தைக் குறைக்கிறது.*

*நம்முடைய ஆன்மிக சிந்தனையில், இறைவனையே நம் குரு-பரம்பரையின் முதல் குருவாகக் கொள்கிறோம். இதற்கு அவரவர் சித்தாந்தத்திற்கு ஏற்ப ஒரு நாமம் சூடப்படும். உதாரணமாக சைவ மரபில், சதாசிவனாகிய பெருமான் ஆதிகுரு. சங்கர பகவத்பாதர் நடு நாயகமாகத் திகழ்கிறார். நம்முடைய சமகால குரு இப்பரம்பரையில் கடைசி.*

*சதா3ஶிவ ஸமாரம்பா4ம் ஶங்கராசார்ய மத்4யமாம்*
*அஸ்மதா3சார்ய பர்யந்தாம் வந்தே3 கு3ரு பரம்பராம்*

*சதாசிவன் என்பதால் அவன் என்றும் சிவனாக, நமக்கு மங்களத்தையே கொடுப்பவனாக ஆகிறான். ஆண்டவன் சில சமயம் நம் பாவங்களுக்குத் தண்டனை கொடுக்கலாம். ஆனால் இந்த குரு கருணையே வடிவானவன். சதாசிவன். இவனிடம் தண்டனை கிடையாது; திகட்டத் திகட்ட அருள் மழைதான்.*

*வைணவ மரபிலும் இதே கருத்து கிடைக்கிறது. அங்கு லக்ஷ்மியின் பதியான மகாவிஷ்ணு ஆதிகுரு. நாதமுனிகள், யமுனாசாரியர் ஆகியோர் மத்தியிலும், நம் ஆசாரியன் இந்தப் பாரம்பரியத்தின் எல்லையிலும் நின்று நம்மைக் கடாட்சிக்கின்றனர்.*

*லக்ஷ்மிநாத2 ஸமாரம்பா4ம் நாத2யாமுன மத்4யமாம்*
*அஸ்மதா3சார்ய பர்யந்தாம் வந்தே3 கு3ரு பரம்பராம்*

*இங்கும் ஒரு அழகு. தனியாக இருக்கும் விஷ்ணு ஒருவேளை தண்டனை கொடுப்பவனாக இருக்கலாம். ஆனால் பிராட்டியுடன் இருக்கும் லக்ஷ்மிநாதன் கருணையே வடிவானவன். இத்தகைய குரு பரம்பரையை நாம் வணங்கிப் போற்றுகிறோம். இதில் இந்த குரு உயர்ந்தவர் மற்றவர் குறைந்தவர் என்றெல்லாம் பேதமில்லை. அனைவரும் நமக்கு அறிவளிக்கும் ஆசானாக, வழிகாட்டியாக விளங்குகின்றனர்.*

நம் அறிவு வேட்கையை நிறைவேற்ற இறை சக்தி நம்முடனே வாழ்ந்து நமக்கு அருள் தருகிறது. அந்தக் கனலின் தூண்டுதலால் நம் பாரம்பரியம் ஆன்மிகக் கடலாகக் காலத்தால் வற்றாது நிலைத்து நிற்கிறது.

இவற்றின் நீரோட்டமான கருத்து, பரம்பொருள் என்னும் பெரும் சக்தி, நம்மை இடையறாமல் காக்கிறது என்பதேயாகும். ஆண்டவன் என்ற ஒரு பிடிப்பே நமக்குப் பெருந்துணை. 'ஒருக்கால் ஆண்டவன் என்று யாரும் இல்லாவிட்டாலும், நாம் அவரை உண்டாக்க வேண்டும் என்னும் கட்டாயத்தில் உள்ளோம்' என்று வால்டேர் என்னும் பிரான்ஸ் நாட்டு அறிஞன் கூறுவதை இங்கு நோக்க வேண்டும்.

> *If God did not exist, it would be necessary to invent him. - Voltaire*
>
> *குரு:* உண்மைதான். கடவுள் உள்ளானா அல்லது அது வெறும் கட்டுக்கதையா என்று ஆராய்வதைவிட அந்த மாபெரும் துணை நமக்கு அவசியமா, இல்லையா என்பதே நம் கேள்வி. வால்டேர் பதில் சொல்லி விட்டார்.

---

## ரமணோதயம்
## Voluntary Services

| | |
|---|---|
| K. சுரேஷ் ஜானகிராமன் | 9444127770 |
| ராஜேஷ் M.S. | 9840075778 |

## பௌர்ணமி நாட்கள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மே | 15 | ஞாயிறு | நண்பகல் 12.45 | 16 | திங்கள் | காலை 9.43 |
| ஜூன் | 13 | திங்கள் | இரவு 9.02 | 14 | செவ்வாய் | மாலை 5.21 |
| ஜூலை | 13 | புதன் | அதிகாலை 4.00 | 14 | வியாழன் | நண்பகல் 12.06 |
| ஆகஸ்ட் | 11 | வியாழன் | காலை 10.38 | 12 | வெள்ளி | காலை 7.05 |

# ஔவைக் குறள்

## விளக்கம்: ராம் மோஹன்

### *16. முக்தி காண்டம்*

*குறள் 151: மனத்தோடு உறுபுத்தி ஆங்காரம் சித்தம்*
*அனைத்தினும் இல்லை அது.*

*பொருள்: முத்தி என்பது அந்தக் கரணங்களாகிய மனம், புத்தி, அகங்காரம், சித்தம் ஆகியவற்றைக் கடந்த நிலை.*

*குறள் 152: வாக்கும் கருத்தும் மயங்கும் சமயங்கள்*
*ஆக்கிய நூலினும் இல்.*

*பொருள்: ஆழ்ந்த ஆன்மிக அனுபவம் இல்லாமல் வெறும் வாக்குத் திறமையாலும், பெயர் மற்றும் புகழுக்கு ஆசைப்பட்டு, தமது அறிவாற்றலைக் கொண்டு மட்டுமே எழுதும் நூல்களாலும் தெள்ளிய ஞானம் இல்லாமல் அறிவு மயக்கத்தில் மூழ்கிக் கிடப்பவராலும், எழுதப்பட்ட நூல்களால் முத்திஞானம் கிடைக்காது.*

*விளக்கம்: இதே கருத்தினை கடோபநிஷத்தில் யமன் நசிகேதஸுக்கு விளக்குகிறான்.*

*நாயமாத்மா ப்ரவசனேன லப்4யோ*
*ந மேத4யா ந ப3ஹுனா ஶ்ருதேன ।*

*ஆத்மா அல்லது முக்தி மன உறுதியற்றவர்களால் அறியப்படுவதில்லை. வெறும் நூலறிவினால் அது பெறப்படாது. பல்வேறு உபந்யாசங்களைக் கேட்பதாலும், பல்வேறு நூல்களைப் படிப்பதாலும்*

பெறப்படுவதில்லை. யார் ஆழ்ந்த சிரத்தையுடன் உள்ளுணர்வை ஆன்மவிசாரத்தால் தொடர்கிறானோ, அவனாலேயே அது பெறப்படுகிறது” என்று உபநிஷதம் விளக்குகிறது.

*குறள் 153: உருவம் ஒன்றில்லை உணர்வில்லை ஓதும்*
*அருவமும் தானதுவே ஆம்.*

**பொருள்:** உருவம், அருவம், உணர்வு என்பவை அனைத்தையும் கடந்ததே முக்தி நிலை. இது இராப்பகல் அனைத்தையும் கடந்த நிலை.

**விளக்கம்:** *கந்தர் அலங்காரம்* 73-ஆவது பாடலில் அருணகிரிநாதர் இதே கருத்தினை விளக்குகிறார்.

போக்கும் வரவும் இரவும் பகலும் புறம்பும் உள்ளும்
வாக்கும் வடிவும் முடிவும் இல்லாதது ஒன்று வந்துவந்து
தாக்கும் மனோலயம்தானே தரும் எனைத் தன் வசத்தே
ஆக்கும் அறுமுகவா சொல்ல ஒணாது இந்த ஆனந்தமே.

முக்தி நிலைப் பரவசத்தை அருணகிரியார் இப்பாடலில், “போக்கும், வரவும், இரவும், பகலும் கடந்த நிலையான முக்தி நிலையில், ‘உள், வெளி’ என்பதே கிடையாது. ஆன்ம சாட்சாத்காரம் வாக்கும், வடிவமும் கடந்த ஒன்று. அது உன்னை முற்றுமாக பற்றிக் கொள்கிறது. அந்நிலையை எய்தியபின் நீ செய்யவேண்டிய முயற்சி எதுவுமே இல்லை. உனது மனம் முற்றிலும் ஆன்மாவில் ஒடுங்குகிறது. ஜீவன், வரம் என்ற வேறுபாடு இன்றி பரமாத்மா ஜீவனைத் தன்னுள் கரைத்து ஒன்றாக்குகிறது. இந்தப் பாரமார்த்திக நிலை விளக்குதற்கு அரியது என்கிறார்.

*குறள் 154: தனக்கோர் உருவில்லை; தானெங்கு மாகி*
*மனத்துஅகமாய் நிற்கும் அது.*

**பொருள்:** நாமரூபம் கடந்த ஆன்ம சாட்சாத்காரம் நம் அணுக்கள் தோறும் பரவி எண்ணத் தொகுதியாகிய மனம் என்பதை நீக்கி, ‘அஹம்’ என்னும் ஆன்மாவாய் ஒளிரும்.

அதாவது உருவம் கடந்த முக்தி, உடல்-உணர்வு எங்கும் பரவி, மனம் உதிக்கும் ஸ்தானத்தில் நிலைபெற்று நிற்கும்.

**விளக்கம்:** உருவம் கடந்த முக்தி, உடல்-உணர்வு எங்கும் பரவி நிற்பதை தாயுமானவர் மிக அழகாக விளக்குகிறார்.

அங்கு இங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய்
ஆனந்த பூர்த்தியாகி,அருளொடு நிறைந்தது எது?
தன் அருள் வெளிக்குளேஅகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும் படிக்கு இச்சை வைத்து, உயிர்க்கு உயிராய்த்
தழைத்தது எது?

என ஆன்ம சாட்சாத்கார நிலையைத் தாயுமானவர் விளக்குகிறார்.

இந்த ஆத்ம சாட்சாத்காரமாகிய முக்தி எங்கு நிலைபெறுகிறது என்பதை ஔவையார், 'மனத்து அகமாய் நிற்கும் அது' எனச் சுட்டுகிறார்.

பகவானும் தனது மற்றொரு குறட்பாவினால் இதே கருத்தைக் கூறுகிறார்.

ஞானத்து நான்ஆரும் தானம்உறார் வாக்பரையார்
தானம்தேர்தல் சபத்தில் சால்பு

இதன் பொருளாவது: 'நான்' என்பது எங்கு விளங்குகிறதோ அந்த இடத்தை ஆத்ம விசாரத்தால் தேடி, அங்கேயே நிலைபெற்று நிற்க வேண்டும். மனம் உதிக்கும் இடத்தை அடைந்து அங்கேயே நிலைபெறுக.

நான்ஒன்று தானத்து நான்நான் என்றுஅது
தானாகத் தோன்றுமே உந்தீபற
தானது பூன்றமாம் உந்தீபற

என்று உபதேச உந்தியார் 20-ஆவது பாடலிலும் பகவான் விளக்குகிறார். எண்ணத் தொகுதியாக மனம், 'நான்' எனும் முதல் எண்ணத்தில் இருந்து உதிக்கிறது. அந்த மனம் உதிக்கும் இடத்தை உள்முக நோக்கால்

ஆராயும் இடத்து, மனம் ஆத்மாவில் ஒடுங்கி, ஆன்ம சாட்சாத்காரம் ஒன்றே நிலைபெற்று நிற்கும்.

பகவான் தன் ஆன்ம வித்தைக் கீர்த்தனம் 4-ஆவது பாடலிலும் இதைத் தெளிவுற விளக்குகிறார்.

கன்மாதி கட்டவிழ சென்மாதி நட்டமெழ
எம்மார்க்கம் அதனினும் இம்மார்க்கம் மிக்கெளிது
சொல்மானத தனுவின் கன்மாதி சிறிதுஇன்றி
சும்மா அமர்ந்திருக்க அம்மா அகத்தில்ஆன்ம
சோதியே, நிதானு பூதியே; இராது பீதியே
இன்ப அம்போதியே

ஸஞ்சிதம், பிராரப்தம், ஆகாம்யம் ஆகிய மூன்றுவித பந்தங்களின் கட்டு அவிழவும், ஜனனம்-மரணம் முதலிய துன்பங்கள் நீங்கிப் போவதற்கும் பல்வேறு வழிகளைத் தேடுகிறோம். இவ்வெல்லா வழிகளிலும் ஆன்ம விசாரம் ஆகிய பகவானின் ஆன்ம விசாரம் மட்டுமே மிகச் சிறந்தது. ஏனெனில் மனத்தினுடையவும் வாக்கினுடையவும் உடம்பிற்கும் ஆன செயல்கள் எதுவுமே இந்த விசார மார்க்கத்திற்குத் தேவைப்படுவதில்லை. ஆன்ம விசாரம் முழு சிரத்தையுடன் செய்யும்போது இவை அனைத்துமே அற்றுப்போய் 'ஸத்'-நான் இருக்கிறேன் என்னும் அறிவு ஒன்று மட்டுமே எஞ்சி நிற்கும். மற்றவை எதுவுமே இருப்பதில்லை. அப்போது, இதயத்தில் ஆன்ம ஜோதி ஒளிர்கிறது. இந்த அழிவற்ற அனுபவத்தின்பின் அச்சம், ஆசை போன்ற அத்தனை உணர்வுகளும் ஒழிந்து போய், நாம் ஆன்மிகக் கடலில் நிரந்தரமாகத் திளைக்கிறோம் என்பது பகவானின் உபதேசம். இதையே 154-ஆம் குறளில் ஔவையார் ரத்தினச் சுருக்கமாகக் கூறுகிறார்.

குறள் 155: பெண்ஆண் அலியென்னும் பேர்ஒன்று இலதாகி
விண்ணாகி நிற்கும் வியப்பு.

பொருள்: பெண்-ஆண்-அலி என்னும் பெயர் இல்லாததாகி நாம-ரூபம் கடந்து, ஆத்மா சிதாகாசமாய்

*விரிந்து எங்கும் பரவி நிற்பதே முக்தி நிலை - இறைநிலை.*

***விளக்கம்:*** *முக்தி நிலை என்பது எல்லாமாகி நிறைந்து, அதே சமயம், எல்லாவற்றையும் கடந்த நிலையாகும். இதனை மாணிக்கவாசகர் திருவெம்பாவையில் அழகுற விளக்குகிறார்.*

***பெண்ணாகி ஆணாகி அலியாய் பிறங்குஒளி சேர்***
***விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகி***
***கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்***

*என சிவபிரானின் திருக்கழல்களைப் பாடுகிறார்.*

*குறள் 156:* ***அனைத்துருவ மாய்ஆய அறிவை அகலில்***
***தினைத்துணையும் இல்லை சிவம்.***

***பொருள்:*** *'சித்' என்னும் பேரறிவு அனைத்துப் பொருட்களாகவும் எங்கும் பரந்தும் விரிந்தும் கிடக்கிறது. அதுவே பிரணவம் ஆக உள்ளது. அதனை இடைவிடாது தியானிக்க வேண்டும். அதை விட்டு நீங்கினால் ஆத்ம சாட்சாத்காரம் அடைய சிறிதும் இயலாது.*

*பிரணவ தியானத்துள் அனைத்தும் அடங்குவதை திருமூலர் அழகாக விளக்குகிறார்.*

*ஓம்எனும் ஓங்காரத் துள்ளே ஒருமொழி*
*ஓம்எனும் ஓங்காரத் துள்ளே உருஅரு*
*ஓம்எனும் ஓங்காரத் துள்ளே பலபேதம்*
*ஓம்எனும் ஓங்காரம் ஒண்முத்தி சித்தியே.*

*(திருமந்திரம், 2676)*

*ஓம் என்னும் பிரணவத்தைத் தியானிக்கும்போது, ஞானஉபதேசம் உள்ளே முகிழ்க்கிறது. அந்த ஞானம் உரு, அரு, நாமம், ரூபம் அனைத்தையும் தனக்குள்ளே அடக்கியது. இத்தகைய பிரணவத்தின் உட்பொருளை விசாரித்து அறிவதன் மூலம் முத்தி சித்திக்கும் என்கிறார் திருமூலர்.*

*குறள் 157: துணிமுகத் துக்காதி யாத்துஉன் அறிவின்றி*
*அணிதார் ரெண்டு விரல்.*

*பொருள்: துணி=ஒளியுள்ள; துன்=பொருந்திய; தார்=அங்குசமாகிய சுண்டு விரல்*

*விளக்கம்: இங்கே இரண்டு யோக முத்திரைகளை ஔவையார் விளக்குகிறார். கட்டை விரல் ஆட்காட்டி விரலுடன் பொருந்தி இணைத்து, மற்ற மூன்று விரல்களையும் தனியாக்குவது சின்முத்திரை. மற்றொரு சக்திவாய்ந்த முத்திரை கட்டை விரலையும் ஆட்காட்டி விரலையும் ஒரு விரலோடு இணைத்து, மற்ற இருவிரல்களையும் தனிப்படுத்துவது விளக்கவியலா மர்மம் எனப்படும்.*

*குறள் 158: மயிர்முனையில் பாதி மனத்துஅறிவு உண்டேல்*
*அயிர்ப்புஉண்டு அடங்காதி நிலை.*

*பொருள்: அயிர்ப்பு=சந்தேகம்*

*ஒரு மயிர்முனையில் பாதி அளவு நுண்ணியதாய் ஓர் அசைவும் அற்று மனம் யோகத்தில் நிலைத்து இருந்தால், மனம் உண்முகப்பட்டு, ஞானம் உண்டாகி ஆத்மா சிவனுடன் ஒன்றும் ஆதி நிலையில் நிலைபெற்று இருக்கும்.*

*குறள் 159: தற்பர மான சதாசிவத்தோடு ஒன்றில்*
*உற்றறி வில்லை உயிர்க்கு.*

*பொருள்: முன்னே கண்டபடி உள்முகமாய் திருப்பப்பட்ட மனமானது பேரறிவில் பொருந்தி அசைவற்ற நிலையில் இங்ஙனம் சிவத்துடன் ஒன்றும்போது ஜீவர்களின் எண்ண அலைகள் ஒடுங்கி, மனம் பரத்தில் கரைந்து விடும்.*

*விளக்கம்: 'மாற்ற மனம் கழிய நின்ற மறையோன்' என்று இந்நிலையை சிவபுராணம் விளக்குகிறது.*



பகவானும் 'உபதேச உந்தியார்' 15-ஆம் பாடலில்,

மனஉரு மாயமெய்ம் மன்னும் மாயோகி
தனக்கோர் செயலிலை உந்தீபற
தன்னியல் சார்ந்தனம் உந்தீபற

இங்ஙனம் எண்ணக் குவியல் ஆகிய மனத்தின் உரு நாசமாகி, மெய்ப்பொருளில் நிலைபெற்ற மஹாயோகிக்கு மேல் ஒன்றும் செய்தல் அவசியமே இல்லை. ஏனெனில் அவன் தன்னுடைய இயல்பாகிய 'ஸத்' என்னும் ஆன்மநிலையை, இருப்பு உணர்வில் நிலைபெற்றுள்ளான்.

குறள் 160: உறக்கம் உணர்வு பசிகெடப் பட்டால்
பிறக்கவும் வேண்டா பிறப்பு.

பொருள்: உறக்கம், இந்திரிய உணர்ச்சிகள், பசி ஆகியவற்றைக் கட்டுக்குள் கொண்டுவந்தால், இறப்பு-பிறப்பு ஆகியவற்றைக் கடந்து, 'மரணமில்லாப் பெருவாழ்வு' என்னும் சாஸ்வத நிலையை எய்துகின்றனர்.

# சுவாமினி ஆத்மானந்தா

## வி. நிரஞ்சன்

*விட்டிடில் கட்டமாம் விட்டிடாது உனை உயிர்*
*விட்டிட அருள் புரி அருணாசலா*
*(அருணாசல அக்ஷரமணமாலை, 96)*

பகவானுடைய சன்னிதியிலிருந்து ஜே.கே. பள்ளிக்குத் திரும்பினார் ப்லாங்கா. ரமண சன்னிதியின் மேன்மையை அனுபவித்திருந்த அவர் பகவானிடமே திரும்பி வந்து தனது சாதனையைத் தொடர பெரிதும் விரும்பியிருந்தார். அவருடைய உள் மனது அவ்வாறு நிகழாது என்று உணர்த்தியதையும் அவர் குறிப்பிடுகின்றார்.

ஆம். அவரவர் பக்குவம், பதம், வினைப்பயன், இவற்றின் விளைவால், அவரவர் தங்களுக்குரிய குருவினை அடைகின்றனர். புற முக நிகழ்ச்சிகளும் அதற்கு ஏற்ப நிகழும். 1943-லிருந்து 1945-வரை அதாவது இரண்டாம் உலகப் போர்க்காலம் வரையில் இந்தியாவில் இயங்கி வந்த ஆங்கிலேய அரசால் ப்லாங்கா ஒரு ஜெர்மானியர் என்று கருதப்பட்டு ராஜ்காட்டிலிருந்து வெளியே செல்லத் தடை விதிக்கப்பட்டார்.

இந்த இடைக்காலத்தில் தான் அவர் மெல்லமெல்ல ஆனந்த மயி மாவின் கருணைக்குப் பாத்திரம் ஆனார். ப்லாங்காவை முதன்முதலில் மாவிடம் செல்லுமாறு தூண்டியவர் இமானுவல் சோரென்சென் ஆவார். பகவானால் பிறவிச் சித்தர் என்று அழைக்கப்பட்டவர். டேனிஷ்காரரான அவர் தனது ஆன்மானுபவத்தை

பகவானின் சன்னிதி முன் உறுதிசெய்து கொண்டவர். சூன்யாதா என்றும் அழைக்கப்பட்டவர். அவரால் ஆற்றுப்படுத்தப்பட்ட ப்லாங்கா, மாவை சில முறை தரிசித்திருக்கின்றார். இருந்தும் மாவிடம் தன்னை ஒப்படைத்துக் கொள்ளும் மன உறுதி அடைந்தாரில்லை.

ஒருமுறை அன்பர் ஒருவர் பகவானிடம் எவ்வாறு ஒருவர் உண்மையான ஞான குரு என்பதை உறுதி செய்துகொள்வது என வினவினார். அதற்கு பகவான் யார் ஒருவரின் சன்னிதியில் மனச்சலனம் முழுவதும் அடங்கி சாந்தம் விளைகிறதோ அவரே ஞான குரு என்று தெளிவாக்குகிறார்.

கேள்விகேட்டவர் ஞான குருவாகிய பகவானிடமே இந்தக் கேள்வியைக் கேட்கின்றார். இதில் வியப்பு ஒன்றும் இல்லை. சற்குருவிற்கான சற்சீடன், சற்சீடனுக்கான சற்குரு என்னும் இணைப்பு மிகவும் புனிதமானது. உரிய காலத்தில் நல்வினைப் பயனாயும், தவிக்கும் ஞான வேட்கையினாலும், பதத்தில் இருக்கும் சற்சீடன் கருணையே உருவான சற்குருவை அடைந்துவிடுகிறான். அச்சமயத்தில்தான் சீடன் சற்குருவின் வல்லமையை ஓரளவிற்கு உணர்கின்றான்.

ப்லாங்காவை மாவிடம் கொண்டு சேர்ப்பித்த தூய ஆத்மா லூயி தாம்சன் என்னும் ஆங்கிலேய இளைஞன். இளம் வயதிலேயே விஷயபோகங்களை அசத்தியம் அனித்தியம் துக்கமயம் என்று உள்ளுணர்ந்து மெய்ப்பொருள் நாட்டத்தில் தபசு கொண்டவர். தனது நாட்டை விட்டுவிட்டு இலங்கைக்கு வருகின்றார். அங்கு இருந்துவிட்டு தென் இந்தியாவிற்கு வருகின்றார். ரமண ஆசிரமத்திலும் சில வருடங்கள் தங்குகின்றார். பின்னர் கேரளாவைச் சார்ந்த குரு ஒருவரை அடைந்து அவரிடம் இருந்துவந்த காலத்தில் ஆனந்த மயி மாவின் புகைப்படம் ஒன்றைக் கண்டு மாவின் நிர்மல ஆனந்த வதனத்தால் ஆட்கொள்ளப்பட்டுத் தனது குருவின் ஆசியோடு மாவைத் தரிசிக்கக் காசிக்கு வருகின்றார்.

ரமண ஆசிரமத்தில் ப்லாங்காவும் இவரும் சமகாலத்தில் இருந்து வந்ததால் ப்லாங்காவை ராஜ்காட்டில் சந்திக்கின்றார். கையில் காசு இல்லை, பழைய ஆடைகள், அன்றாட உணவிற்குக் கூட வசதி இல்லாததால் பட்டினி, உடல் சீர் கெட்டிருந்த நிலை, எதையுமே பொருட்படுத்தாது மெய்ப்பொருள் நாட்டம் ஒன்றே குறியாய் இருந்தார் தாம்சன். மாவை தரிசித்ததிலிருந்து தாம்சன் மாவின் மீது மாறாப் பக்தி கொண்டார். மாவைப் பற்றிப் பேசும் பொழுதெல்லாம் அவர் கண்கள் ஆனந்தத்தில் திளைத்து பிரகாசம் ஆயின. தாம்சன் ஒரு கவிஞரும் கூட. தாம்சன் ப்லாங்காவை முற்றிலும் மாற்றிவிட்டார். தாம்சனின் அதி தீவிர தபசும், மாவின் மீது அவர் கொண்டிருந்த பக்தியும், ப்லாங்காவை மாவின்பால் கொண்டு சேர்த்தன. தனது 23-ஆவது வயதில் இங்கிலாந்தை விட்டு வந்த தாம்சன் 1949-இல் தனது நாற்பதாவது வயதில் பெனாரசில் மாவின் அடியவராகக் காலமானார். ப்லாங்காவின் மனதில் ஆழப் பதிந்தது தாம்சனின் புனித வாழ்க்கை. ப்லாங்கா கொஞ்சம் கொஞ்சமாக மாவின் சன்னிதி வல்லமைக்கும், மாவினது எளிமையும் தெளிவுமான உபதேசங்களுக்கும், தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

மால்கம் டில்லிஸ் என்பவரிடம் நிகழ்ந்த நேர்காணலில் ப்லாங்கா சிறுவயதிலேயே தனக்கு நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளைப் பகிர்ந்துகொள்கின்றார். அவை இந்தியாவின்பால் அவருக்கு இருந்த ஒட்டுதலை உணர்த்துகின்றன. பள்ளியில் படித்துக் கொண்டிருக்கும்பொழுது மகாபாரதம், ராமாயணம் என்கின்ற பெயர்களைக் கேள்விப்படுகின்ற அவர் தன்னுள் அவ்விரண்டு ஒலிகளும் மந்திரம் போன்று ஒலித்துக்கொண்டு இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். பள்ளி மாணவி ஒருவரிடம் இருந்து வாங்கிய ஜே.கே-யின் முதல் வெளியீடாகிய *At the Foot of the Master*

என்னும் தலைப்புக் கொண்ட சிறு புத்தகம் ஒன்றைப் படிக்க நேர்ந்ததும், அன்றிலிருந்து அவர் இறைச்சியை உட்கொள்ள விருப்பம் அற்று விட்டு விட்டார் என்றும், தனது தந்தையும் பாட்டியாரும் வற்புறுத்திய பின்னரும் இறைச்சியை மறுத்துவிட்டதாகவும், சிறிது நாட்களில் தனது குடும்பத்தினரும் தன்னோடு சேர்ந்துகொண்டு இறைச்சியை விட்டுவிட்டதாகவும், குறிப்பிடுகின்றார்.

இன்னொரு இடத்தில் அவர் பதினாறு வயதில் தனக்கு நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை குறிப்பிடுகின்றார். ஒருநாள் பூங்காவில் தன்னைச்சுற்றி நிகழ்ந்துகொண்டிருந்த ஈவு இரக்கம் அற்ற அழிவுகளைப் பற்றிக் கவலையோடு சிந்தித்துக் கொண்டிருந்தார். திடீரென்று மரங்கள் பாறைகள் வானம் தண்ணீர் அனைத்தும் அடங்கிய இந்த உலகத் தோற்றம் அதி வீரியம் மிக்க உயிரோட்டத்தோடு பிரகாசிப்பதைக் கண்டார். அவை அனைத்தும் ஒரு திவ்விய ஒளியால் நிறைந்து விளங்கக் கண்டார். காண்பவனும் காட்சியும் வேறுபடாமல் ஐக்கியப்பட்டு இருந்தன. அது பரவச ஆனந்த ஏகத்துவமாய் இருந்தது. நித்திய அன்பின் வெளிப்பாடாயும் இருந்தது. காலம் கடந்த ஒரு கணத்தில் இவை யாவும் ப்லாங்காவிற்கு மெய்க்காட்சியாய் வெளிப்பட்டு மறைந்தன. அவ்வனுபவம் அவரது வாழ்க்கையை உள்முகமாக ஆற்றுப் படுத்தும் உட்சக்தியாயிற்று.

1945-இல் ப்லாங்காவின் மீது விதித்திருந்த பயணத்தடை ஆங்கிலேய அரசால் நீக்கிக் கொள்ளப்பட்டது. வெளியே எங்கு வேண்டுமானாலும் செல்லுவதற்கு சுதந்திரம் கிடைத்த அந்த நேரத்தில் மாவிடம் அன்பினால் பிணைக்கப்பட்ட ப்லாங்கா மாவைப் பிரிந்து வேறு எங்கும் செல்வதற்குச் சற்றும் ஆர்வம் எழாது போயிற்று என்று குறிப்பிடுகின்றார். ஞான ஆசானை அடைந்த சற்சீடன் குரு அருளையே கதியாகக் கொண்டு விஷய மோகங்கள் தன்னுள் அழிந்திருக்கக் காண்பான்.

ப்லாங்காவின் மனதில் ஒரு தயக்கம் இருந்துவந்தது. அவர் எளிமையான வாழ்கை வாழ்ந்து வந்தார். பள்ளியில் அவருக்குக் கிடைத்த வருவாய் குறைவாயினும் போதுமானதாக அவர் மன நிறைவு கொண்டார். அவருக்கு அச் சமயம் இந்திய வானொலியில் மேலை நாட்டின் இசை இயக்குனாரக வேலை செய்யும் ஒரு வாய்ப்பு கிட்டியது. இளம் வயதிலேயே மேலை நாட்டின் சாஸ்திரீய இசையில் பியானோ வாசிப்பது உள்ளடக்கி ப்லாங்கா தேர்ச்சி அடைந்திருந்தார். அந்தப் பணி ஒரு விதத்தில் அவரது மனதுக்கு இதம் தருவதாய் இருக்கும். அவருடைய வருமானம் சற்றே மிகுதியாக இருக்கும். பொருளாதாரத் தன்னிறைவு கிட்டும். இருந்தும் அவர் அவ்வாய்ப்பை ஏற்றுக்கொள்ளவில்லை. உண்மையைத் தேடி உள்முகமாய்ச் சென்று கொண்டிருந்த அவர் தனது மனதைக் கலை ஆர்வம் என்கின்ற அபர மோகத்தில் ஆழ்த்திக்கொண்டு லட்சியத்தை இழக்க இசையவில்லை.

இவ்வாறு சுத்த சாதகராய் மாவின் சன்னிதியில் ப்லாங்கா மேலும் மேலும் பக்குவி ஆனார். பள்ளி வேலையை விட்டுவிட்டு மாவின் அடியவர்களின் கூட்டத்தில் தன்னை முற்றிலும் இணைத்துக் கொள்வதற்குச் சற்று முன்பாக அவரது மனதில் ஒரு தயக்கம் இருந்தது. சுயமாக ஒரு வித வாழ்க்கையை வாழ்ந்து பழகிவிட்டார். இதை விட்டுவிட்டு மாவின் குழுவில் சேர்ந்து துறவியாய் வாழ நேரும்பொழுது புதிய நியதிகளும் கட்டுப்பாடுகளும் தனக்குச் சம்மதம் இல்லாமல் போனால் என்னாகும் என்கின்ற கவலை இருந்துவந்தது. குருவினிடம் தன்னைச் சமர்ப்பித்துக் கொள்வது என்பது சொல் மாத்திரச் செயல் இல்லை. “எனக்கோர் குறை உண்டோ, குறையும் குணமும் நீஅல்லால், எண்ணேன் இவற்றை என் உயிரே, எண்ணம் எதுவோ அது செய்வாய் கண்ணே உந்தன் கழல்

இணையில் காதல் பெருக்கே தருவாயே" என்கின்ற சகல தியாகத்தோடு கூடிய ஆன்ம சமர்ப்பணமே உத்தம சற்சீடத்துவம் ஆகும். அந்தப் பக்குவத்தை ப்லாங்கா கொஞ்சம் கொஞ்சமாக அடையலானார். அந்தத் தருணத்தில்தான் ஓர் அற்புதம் நிகழ்கின்றது.


1962-ஆம் ஆண்டு மாவின் சீடர் ஒருவர் சன்னியாசம் எடுத்துக் கொள்வதாய் இருந்தது. அவ்வமயம் மா அவரை அழைத்து அவரது சம்மதத்தைக் கேட்டபொழுது அவர் அச் சமயம் சன்னியாசம் எடுத்துக் கொள்ளவில்லை என்று கூறினார். அந்தச் சூழ்நிலையில் ப்லாங்கா தான் சன்னியாசம் எடுத்துக் கொள்ள முன் வந்ததால் மா முழு மலர்ச்சியுடன் வரவேற்று ப்லாங்காவை சன்னியாசினியாக, சுவாமினி ஆத்மானந்தாவாக ஆக்கினார்.

துறவு, ஆசிரம வாழ்க்கை, இவற்றின் நியதிகள் ஆரம்பகாலத்தில் கடினமானவையாய் இருந்த போதிலும் ஆத்மானந்தா சமமனதோடு ஏற்றுக் கொள்கின்றார். இது குறித்து அவர் கூறியது: "இந்தியாவிலும் மாவின் சன்னிதியிலும் ஆசிரம வாழ்க்கையிலும் தனது மனம் இதமாக ஒத்துபோகின்றது என்பதே. ஜெர்மனி அயல் இடமாகத் தோன்றிவந்தது என்றும் இங்கே தனக்கு மிகவும் பழக்கப்பட்ட இடமாகத் தோன்றுகிறது" என்றும் விளக்குகின்றார். 1951-லேயே அவர் இந்தியக் குடியுரிமை பெற்றுவிட்டார். அச்சமயம் அவர் விசாவிற்காக விண்ணப்பம் செய்துகொள்ளவில்லை. விசா வேண்டாமா என்று கேட்டதற்கு எதற்கு என்று மறு கேள்வியைக் கேட்கின்றார். மாவும் அவர் பக்தர்களுமே அவருக்கு எல்லாம் ஆகிப்போனார்கள். சுவாமினி ஆத்மானந்தா ஞான வேட்கை உடையவராயும், வைராகியாயும் தபஸ்வியாயும் ஆனார். அவருடைய பக்தி, ஞான ஆனந்த சொரூபமான மாவையே மையமாகக் கொண்டுவிட்டது.

சுவாமினி ஓர் இந்தியர் போலேயே மாவை குருவாக ஏற்றுக்கொண்டு சாதனையைத் தொடர்கின்றார். சமம், தமம், உபரதி, திதிக்ஷை, சிரத்தை, சமாதானம், என்னும் ஆறு முகம் கொண்ட மனப் பரிபாகத்தை இயல்பாக்கிக் கொள்ளுவதே சாதனை. மெய்ப்பொருள் விளக்கமும் குருவின் வழிகாட்டுதலும் சாதகரை கன்ம பக்தியோக ஞான வழிகளில் ஏதாவது ஒன்றில் ஒன்றச் செய்துவிடும்.

மாவின் மகா சமாதிக்குப் பின் 1985-ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் ஆத்மானந்தா கடுமையான தொண்டைக் கட்டு நோய்க்கு இலக்கானார். டெஹ்ராடூனில் இருந்து உடல் மிகவும் சீர்கெட்டிருந்த நிலையில் அவர் கங்கலுக்கு வந்து சேர்ந்தார். அங்குதான் மா அடக்கம் செய்யப்பட்டுள்ளார். பளிங்கினால் ஆன கோயில் ஒன்றும் கட்டப் பட்டுள்ளது. ஒரு தங்கும் விடுதியும் வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. தனது அந்திம காலத்தில் மாவின் புனித சன்னிதியில் தனது இறுதிக்கட்ட சாதனையைச் செய்துவிடும் வைராக்கியத்தோடு அவர் உடல் மிகவும் சீர் கெட்ட நிலையிலும் பயணித்து வந்திருந்தார். ஆனால் இறுதிக் கட்டத்திலும் அவரது மனம் விரும்பியதுபோல் மாவின் சந்நிதியில் இருந்து மாவோடு ஒன்றிவிட இயலாது போயிற்று. விடுதியில் தங்கியிருந்த மருத்துவர்கள் அவரது உடல் நிலை மிகவும் ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் அங்கே உரிய சிகிச்சை கொடுக்க இயலாது என்றும் அவரை உடனேயே பெனாரசிற்கு அழைத்துச் செல்லவேண்டும், அங்கே தான் தகுந்த சிகிச்சை கொடுக்க முடியும் என்றும் சொல்லிவிட்டனர்.

சுவாமினியோ இருபது மணி நேரம் பயணித்து பெனாரசில் சிகிச்சை பெற விரும்பவில்லை. இறுதிக் கட்டத்தை நெருங்கி கொண்டிருந்தது அவரது உடல். அவரது உள் மனம் அவரது முடிவு நெருங்கி வருகிறது என்பதை அறிந்திருந்தது. ஆதலால் அவர் மாவின் சமாதிக்கு அருகில் ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த தர்ம சாலையில் தங்க இசைந்தார். பழைய



இடம் வசதி குறைந்து இருப்பினும் மாவின் விருப்பம் அதுவே என்று உணர்ந்தார் சுவாமினி. மாவின் அருளால் அங்கே அவரது சினேகிதியும் மாவின் இன்னொரு சீடருமான மெலிடா மாஷ்மன் தங்கியிருந்தார். மெலிடாவின் அன்புக் கவனிப்பில் சுவாமினி சற்றே நலம் பெற்றிருந்தார். எனினும் அவரது உடல் நிலை தொடர்ந்து மோசமாகிக் கொண்டேவந்தது. மாவின் நாமத்தை இடைவிடாது செபித்து வந்தார். மெலிசாவும் அவரோடு சேர்ந்து கொண்டார். மாவின் நாம செபம் நிகழ்ந்து கொண்டே இருந்தது. சுவாமினியின் குரல் கம்மியது. மூச்சும் உள்ளே இதமாக அடங்கத் துவங்கியது. சலனம் சிலிர்ப்பு எதுவும் இன்றி உடல் இயக்கம் ஒய்ந்தது.

**உதவிய மூலங்கள்:**

*ஸ்ரீ ரமணாசிரமம், சரணாகதி இதழ்கள் ஜூலை ஆகஸ்ட் செப்டம்பர் 2019, பகவான் சன்னிதி பயன்கள்: சுவாமினி ஆத்மானந்தாவின் நினைவுகள் இணைய தளம்: ஆனந்தமயி மாவும் சுவாமினி ஆத்மானந்தாவும். கட்டுரைகள், தொகுப்புக்கள், நேர்காணல்கள்*

# தலை வணங்கும் தாழ்மையால்

## T.R. கனகம்மாள் - ஒரு நூற்றாண்டு நினைவுகள்

### ஆகுரா

*"செப்பத்தரமில் சிறியேன் சிவரமணன் மெய்ப்பரிசு விள்வேன் அம்மிக்கோன் வியன்அருளால்"* – என்று முருகனார் *ரமணபுராணத்தில்* ரமணனின் நிலையைப் புகலத் துவங்கும்முன் ஒரு முத்தாய்ப்புடன் துவங்குவார். அதுபோன்ற ஒரு நிலையே 'கனகா' என்று பெரியவர்களால் அன்புடன் அழைக்கப்பட்ட திருமதி. கனகம்மாள் அவர்களுடன் பழகிய அனுபவங்களை, அவரது மெய் உணர்வுகளை, அவர் நம்முடன் பகிர்ந்து கொண்ட நிகழ்வுகளை, எழுதத் துணியும்போது நமக்கும் ஏற்படுகிறது. ஒரு நீர்த்தேக்கத்தில் தண்ணீர் ஒரு சிறு துவாரம் வழியாக வெளிப்படும்போது உள்ள அழுத்தம், நிறைமாத கர்ப்பிணியின் பிரசவ வேதனை நமக்கும் உணர்வானது. எழுத வார்த்தைகள் மட்டுமல்ல; சிந்தனையிலும் ஒரு திணறல்.

1995-ஆம் ஆண்டு கனகம்மாள் அவர்கள் எழுதிய 'நினைவில் நிறைந்தவை' புத்தக வடிவில் வெளியானது. ஆச்ரமத்தின் புத்தக சாலையில் இருந்து அவர் எழுதிய அந்தப் புத்தகத்தின் பிரதி ஒன்றை வாங்கி அதில் 'பகவானின் அருள் ஆசிகள்' என்ற அவரது குறிப்புடன் 'கனகா' என்று கையொப்பம் இட்டு அன்பளிப்பாக அளித்த அந்தக் கணத்தை நினைக்கும்போதெல்லாம் கண்கள் பனிக்கும். எவ்வளவு பெரிய ஆத்மா! ஸ்ரீ ரமண பகவான், மஹாபெரியவர் சந்திரசேகர சரஸ்வதி ஸ்வாமிகள் மற்றும் நமக்கெல்லாம் முன்னுதாரமாக வழிகாட்டிய முகவைக்கண்ண முருகனார் போன்ற

*பெரியவர்களுடன் எல்லாம் வாழ்ந்து உறவாடிய ஒரு பெருந்தகை, நம்மிடையே எளிமையின் வடிவமாகப் பழகினார். 'தாம் பெற்ற பேறு பெறுக இவ்வையகம்' என்பதாக அவரது அனுபவங்கள் அனைத்தையும் பகிர்ந்து அளித்துள்ளாரே !*

*திருமதி கனகம்மா 1922-ஆம் ஆண்டு பிப்ரவரி 22-ஆம் நாள் புனர்வசு நட்சத்திரத்தில் (பகவானின் ஜென்ம நட்சத்திரமும் புனர்வசு என்பது குறிப்பிடத்தக்கது) ராதாம்மாள்-ரங்கநாத அய்யர் தம்பதிகளுக்கு மகளாகப் பிறந்தார். இவர்களின் பூர்வீகம் திருவண்ணாமலைக்கு 20 கி.மீ. தூரத்தில் ஒரு கிராமம். கனகம்மாளின் பெரியதந்தை திரு. ராமகிருஷ்ண அய்யர் பகவான் விருபாக்ஷ குகையில் இருந்த காலம்தொட்டே பகவானுக்கு அடிமையாகிவிட்டவர். திருவண்ணாமலையில் மணியம் வேலை பார்த்துக் கொண்டே ஆஸ்ரமத்திற்கு எல்லா வகையிலும் பணி செய்துகொண்டு இருந்தவர். இவரது மகன் 'ராதா' என்ற ராதாகிருஷ்ணன் பகவானின் அணுக்கத் தொண்டர். கனகம்மாளின் அப்பா ஒப்பந்ததாரராகப் பணியாற்றிக்கொண்டு, ஆந்திராவில் கர்னூலில் வசித்துக்கொண்டு அவ்வப்போது அண்ணனுடன் பகவானைத் தரிசித்துவிட்டுப் போவதை வழக்கமாகக் கொண்டவர். கனகம்மாளும் ஆந்திராவிலேயே தந்தையுடன் இருந்து வந்தார் .*

*சிறு வயதில் தந்தை, பெரியப்பா, அண்ணன் ஆகியோருடன் வந்து பகவானைத் தரிசிக்கும் பாக்கியம் பெற்றவர். அப்படி வரும்போதெல்லாம் அவருள் ஒரு ஏக்கம். பகவான் சந்நிதியில் அடியார்கள் அமர்ந்து தங்கள் சந்தேகங்களுக்குக் கேள்விகள் கேட்பதும், பகவான் அவர்களுக்கு விடையளிப்பதுமான ரம்மியமான சூழல் தனக்கு எப்போது வாய்க்குமோ என்று ஏங்குவாராம்.*

*வீட்டுச் சூழலின் நிர்ப்பந்தத்தால் 12 வயதில் இவருக்குத் திருமணம் நடந்தேறியது. இவருக்கு ஆச்ரம வாழ்வில்தான் நாட்டம். பிற்காலத்தில் இல்லற வாழ்வு வேண்டாம் என்று விரும்பினால் கனகம்மாள் இஷ்டம்போல் முடிவு (ஆசிரம வாழ்க்கை) எடுத்துக் கொள்ள தந்தையார் சுதந்திரம் அளித்தார். அதன்படியே இல்லற வாழ்வு தொடங்கும் தறுவாயில் கணவரை வேறு மணம் புரிய அனுமதித்துவிட்டு ஆன்மீக வாழ்க்கை வாழ ஆரம்பித்தார் .*

*1946-ஆம் ஆண்டு முதல், இளம் வயதில் தனியாக திருவண்ணாமலையில் ஸ்திரமாகத் தங்கலானார். பகலில் பகவான் சந்நிதியில் அதிக நேரத்தை செலவிட லானார். பெண்கள் ஆசிரமத்தில் இரவு தங்க இயலாது. ஆதலால் ஆசிரமத்திற்கு அருகிலேயே வெளியே தங்க விரும்பினார். வெளியில் அக்காலத்தில் தங்கும் அறைகள் கிடைக்காது. மிகவும் அசௌகரியமான சூழலில் கிடைத்த அறையில் தங்கலானார். பாம்புப் புற்றுகள் சூழ்ந்த அமைவிடம். புழங்கும் தண்ணீர் கலங்கியதாக இருக்கும். எலிகளின் தொல்லையும் கூட. இவ்வகையான இடர்களை எதிர்கொண்ட போதிலும், ஆசிரமத்தில் பகவான் சந்நிதியை அடைந்தவுடன், பகவானைக் கண்டதும் கிடைக்கும் எல்லையற்ற பேரின்பம் எல்லாத் துன்பங்களையும் விழுங்கிவிடும் என்று கனகம்மாள் கூறுவார்கள். பகவான் சந்நிதியின் பெருமையைக் கூறுங்கள் என்று கேட்டுவிட்டால் போதும்; கனகம்மாவின் கண்கள் ஆயிரம் வாட்ஸ் பிரகாசத்துடன் ஒளிர, விளக்க ஆரம்பித்து விடுவார். வாய் ஓயாது அவர் பகவானைப் பற்றியும் முருகனாரைப் பற்றியும் கூற துவங்கிவிட்டால் முடிக்கவே மாட்டார். நாம்தான் விடைபெற எத்தனிக்க வேண்டும். இதோ ஒரு துளி ....*

*“நான் பகவான் தரிசனத்திற்காக ஹாலுக்கு வரும்போது தூரத்திலிருந்து பகவானைக் காணும்*

போதே, என் உடலிற்குள் ஏதோ ஒவ்வொன்றாக அடங்கி விடுவதுபோல எனக்கொரு உள்ளுணர்ச்சி ஏற்படும். அந்த நிலையில்தான் நடந்து வருவேன். பகவானை நெருங்கும்போது ஒன்றுமில்லா வெற்றுடல் போல இருக்கும். சில நேரங்களில் என் உடலை நானே இழுத்துக் கொண்டு வருவதுபோல் தோன்றும். அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் சில சமயம் பகவான் என்னையே பார்த்துக் கொண்டிருப்பார். அந்தப் பார்வை உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்துவிடும். பார்வையின் வேகத்தைத் தாளமுடியாது. சோபா அருகில்கூட செல்ல முடியாமல், இருந்த இடத்திலேயே வணங்கிவிட்டு ஹாலில் தியானத்திற்கு உட்கார்ந்து விடுவேன். அந்தப் பார்வையின் வேகமானது முயற்சியின்றியே மனதை தியானத்தில் ஆழ்த்திவிடும். பகவான் அடிக்கடி எனக்கருளும் இந்த உணர்வின் அனுபவத்தை நினைத்து நினைத்து நெஞ்சம் பூரிப்படையும். ."

"இப்படியாக பகவானைத் தரிசித்து மகிழ்ந்த கண்கள் அவர் ஸ்தூல உடல் நீங்கியவுடன், அவர் உடலுடன் வலம் வந்த ஆச்ரமத்தைப் பார்த்தபோது எப்படி உணர்ந்தீர்கள்" என்று 1995-ஆம் ஆண்டு அவரின் நேர்காணல் நிகழ்வில் கேட்டோம். இப்படிக் கேட்டவுடன் அவர் கண்கள் குளமாயின. "சாந்தம் தவழும் அந்தத் தங்க மேனியைக் கண்ட கண்களால் அவரது படத்திற்கு மாலை அணிவித்து பூஜித்ததைக் காண இயலவில்லை. 1950-ஆம் ஆண்டு அவர் தேகத்தை நீங்கியவுடன் ஒருவர் பின் ஒருவராக திருவண்ணாமலையை விட்டு கனத்த இதயத்துடன் நீங்கினோம். ஸ்ரீ ரமணாஸ்ரமம் ஒரு சூன்யமாகப் பட்டது. எங்கெல்லாமோ அலைந்து திரிந்தோம். மிக விரைவிலேயே ரமணாச்ரமம் விட்டு வந்த பிரிவை உணர்ந்தோம். 'எவருடைய சிபாரிசுமில்லாது சுதந்திரமாக அமர்ந்து அனுபவிக்கக்கூடிய சன்னதி

விசேஷம் ஸ்ரீ பகவானது சந்நிதி ஒன்றில்தான்', என்று முருகனார் கூறுவார்கள்.

"ஆம்! எங்குச் சென்றாலும் அங்கு ஸ்ரீ ரமணாச்ரமத்தில் கிடைத்த அந்தச் சுதந்திரம் கிடைக்கவில்லை. நடுக்கடலில் பாய்மரத்தை விட்டு நீங்கும் பறவைகள் கடலில் சுற்றிப் பறந்து திரிந்து கடைசியாக மீண்டும் கப்பலின் பாய் மரத்திற்கே திரும்பும். அதுபோல் நாங்கள் ஒவ்வொருவராகத் திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கே திரும்பினோம். பகவானின் தேகமறைவின் துயர் மறக்க, ரமண அன்பர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க ஸ்ரீ முருகனார் பகவான் அருளிய நூல்திரட்டுக்கு விளக்க வகுப்புகள் எடுக்கலுற்றார். இது மிகவும் பயனுள்ளதாகவும், அருமருந்தாகவும் அமைந்தது" என்று கனகம்மா கூறினார் .

கனகம்மா தமிழைத் தாய்மொழியாகக் கொண்டிருப்பினும் ஆந்திரத்தில் வளர்ந்ததால், ஆரம்ப காலங்களில் தமிழை சரியாக அறிந்திருக்கவில்லை. ஆச்ரமத்தில் எவ்வளவோ தமிழ்ப் பண்டிதர்கள் இருந்தார்கள். எனினும், கனகம்மாளைத்தான் முருகனார் பகவானின் 'நூல்திரட்டு' மற்றும் அரிய தமிழ் ஆன்மிக நூல்களைப் படிக்கவைத்து பொருள் விளக்கம் கூறி கற்பித்தார்.

கனகம்மாள், "எனக்கு நினைவில் பதித்துக் கொள்ளும் திறம் இல்லையே" என்றெல்லாம் கூறும்போது, முருகனார், "நினைவில் பதியாவிட்டால் பரவாயில்லை. உள்ளத்தில் பதிந்தால் அதுபோதும்", என்று கரகரத்த குரலில் கூறுவாராம். அந்தக் கணங்களில் "என் மனம் விம்மும். உள்ளத்தில் பதிந்தால் தானே ஊன்றி விசாரித்து அடையமுடியும். முருகனாரின் இந்த வார்த்தைகள் எனது ஆன்ம ஏக்கத்திற்கு மருந்தாக அமைந்தது" என்று கனகம்மாள் கூறுவார்கள்.



உள்ளத்தில் பதிந்தமையால்தான் பல ஆண்டுகள் கழித்து, பல அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க முருகனார் தமக்குப் பாடம் சொல்லிக்கொடுத்த பகவானின் நூல்திரட்டு முழுவதற்கும் தான் பெற்ற பொருளை, இரண்டு பாகங்களாக உரைநூல் எழுதி ரமண உலகத்திற்கு கனகம்மா அளித்தார் .

திரு. முருகனார் பகவான் பக்தரான T.N. கிருஷ்ணசாமி அவர்களின் விருப்பத்திற்கிணங்கி ஆசிரமத்திற்கு எதிரே இருந்த அவரது வீட்டில் தங்கி இருந்த காலம். அப்பொழுதுதான் திருமதி. பத்மா வெங்கட்ராமன் மற்றும் கனகம்மா இருவரும் முருகனாருக்குப் பணிவிடை செய்து அவரிடம் பாடம் கற்று வந்தார்கள். இதனால் கனகம்மா முருகனாரிடம் அதீத மரியாதையும் அன்பும் கொண்டிருந்தார்கள்.

பிற்காலத்தில் முருகனார் ஆசிரமத்தின் உள்ளே தங்கி இறுதிவரை அங்கேயே வாழ்ந்தார்கள். பின்னர் கனகம்மா அதே T.N. கிருஷ்ணசாமி அவர்களின் இல்லத்திலேயே தங்கலுற்றார். கனகம்மா அவர்களின் வேட்கை, அவரது இறுதிக்காலம் அண்ணாமலையில் தங்கி முடிவடைய வேண்டும் என்பதே. எனினும் என்னுள் அவ்வப்போது ஒரு கேள்வி எழுவது உண்டு. அதாவது கனகம்மா அவர்கள் ஒவ்வொரு வேனிற் காலங்களில் வெப்பம் தாளாது மூன்று மாதங்களுக்கும் மேலாகக் கொடைக்கானல் செல்வதுண்டு. அங்குள்ள ரமண அன்பர் ஸ்வேதாரண்யம்-மல்லிகா தம்பதியரின் இல்லத்தில் தங்குவார்கள். நான்தான் அவரை சென்னை விமான நிலையத்தில் வழி அனுப்பிவைப்பேன். மதுரையில் அவர்கள் கனகம்மாவை வரவேற்று கொடைக்கானலுக்கு அழைத்து செல்வார்கள். பின்னர் அதன்படியே சென்னை திரும்பும்போது அவரை வரவேற்று திருவண்ணாமலைக்கு அனுப்பிவைப்பேன்.

இந்த இடைவெளியில் கொடைக்கானலில் இவரின் தள்ளாத வயதில் உயிர் விட்டு விடுவார்களோ என்ற அச்சம் எனக்குள் இருக்கும். இதுபோல்தான் சில பகவானது அன்பர்கள் அருணாசலத்திலேயே உயிர் பிரியவேண்டும் என்ற சங்கல்பத்துடன் வாழ்ந்தும், அச்சங்கல்பம் நிறைவேறாமல் போனதும் எனக்குள் அவ்வப்போது உதிக்கும்.

ஆனால் கனகம்மாளின் முடிவு அதுபோன்று இருக்கவில்லை. பகவானின் ஜெயந்தி விழா 1.1.2010 அன்று மார்கழி புனர்வசு நன்னாளில் பகவானைப் பிரதக்ஷிணம் செய்தவண்ணம் இருந்தபோதே மயங்கி வீழ்ந்தார். அன்பர்கள் அவரை பகவான் சமாதிக்கு முன்பாகக் கிடத்தியவுடன் அங்கேயே ஊன் உடலை நீத்தார். எந்த ஒரு சந்நிதியின் சத் சங்கத்திற்காக ஏங்கினாரோ அதே சந்நிதியின் வாயிலில், எந்த உடல் பகவானைக்



கண்டவுடன் தன்னைவிட்டு கழன்று போவதாக உணர்ந்து, அந்தக் காட்சியை வர்ணித்தாரோ ......

"நான் பகவான் தரிசனத்திற்காக ஹாலுக்கு வரும்போது, தூரத்திலிருந்து பகவானைக் காணும் போதே, என் உடலிற்குள் ஏதோ ஒவ்வொன்றாக அடங்கி விடுவது போல எனக்கொரு உள்ளுணர்ச்சி ஏற்படும். அந்த நிலையில்தான் நடந்து வருவேன். பகவானை நெருங்கும்போது ஒன்றுமில்லா வெற்றுடல் போல இருக்கும். சில நேரங்களில் என் உடலை நானே இழுத்துக் கொண்டு வருவதுபோல் தோன்றும். அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் சில சமயம் பகவான் என்னையே பார்த்துக் கொண்டிருப்பார். அந்தப் பார்வை உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்துவிடும். பார்வையின் வேகத்தைத் தாளமுடியாது. சோபா அருகில்கூட செல்ல முடியாமல், இருந்த இடத்திலேயே வணங்கிவிட்டு ஹாலில் தியானத்திற்கு உட்கார்ந்து விடுவேன். அந்தப் பார்வையின்

வேகமானது முயற்சியின்றியே மனதை தியானத்தில் ஆழ்த்திவிடும். பகவான் அடிக்கடி எனக்கருளும் இந்த உணர்வின் அனுபவத்தை நினைத்து நினைத்து நெஞ்சம் பூரிப்படையும்..” அதே சன்னிதி வாயிலில் உண்மையிலேயே உடலை விட்டார். என்னே பகவானின் கருணை!

அந்த நன்னாளில் அடியேனும் அங்கு இருக்கும் பாக்கியம் பெற்றேன். கனகம்மா அடிக்கடி என்னிடம் கூறுவதுண்டு: “நாங்கள் பகவானை ஸ்தூல உடலுடன் கண்டுகளித்து அவர்பால் ஈர்க்கப் பட்டுள்ளோம். ஆனால் இந்தக் காலத்தில் பகவானை ஸ்தூல உடலுடன் காணாது இருந்தும், அவரது படத்தைப் பார்த்து அவரின் நூல்களைப் படித்து, ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்தும் லட்சக்கணக்கில் பக்தர்கள் வந்தவண்ணம் உள்ளார்கள். நீங்கள்தான், இந்தக்கால பக்தர்கள்தான், எங்களைவிட உயர்ந்தவர்கள்” என்று இக்கால பக்தர்களுக்குத் தலை வணங்குவார் .

என்னே அவர்தம் தலைவணங்கும் தாழ்மை!

கனகம்மாள் அவர்களே! நாங்கள் தங்களுக்கு ஒன்று கூற கடமைப் பட்டிருக்கின்றோம். தங்களுக்கும் எங்களுக்கும் பகவான்பால் பக்தி செலுத்துவது எங்ஙனம் என்று வழிகாட்டியாக வாழ்ந்து காட்டிய முருகனாரின் கதை என்ன என்று நீங்கள் அறியாததா! பகவான் அளித்த அருணாசல ஸ்துதிபஞ்சகத்தை வாசித்த உடனேயே, பகவானை நேரில் காணாமலேயே “பார்வளர் கயிலை பருப்பதம் நீங்கி நம்மிடையே உதித்த சிவபெருமானே ரமணர்” என்று பாடியவர்தானே அந்த முருகனார். இது அவர் அந்தக் காலத்திலேயே காட்டிய வழிதான் அம்மா! அவர் மூலம் பகவானின் நூல்திரட்டு அனைத்தையும் எங்களுக்குப் பொருள் விளங்க அள்ளித் தந்த அன்னையே, உனது தாழ்மைக்குத் தலை வணங்குகிறோம்.

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

**மௌனிசாது**
**மொழிமாற்றம்: ராம் மோஹறன்**

## 24. தீட்சைகள்

பகவானின் முன்னிலையில் மெய்த் தத்துவத்தை நாம் அறிவதற்கு இதுகாறும் தடையாய் இருந்த மனமே நின்று விடுகிறது. பல யுகங்கட்கு முன்பேயும் நாம் வாழும் இக்காலத்திலும்கூட ஆத்மிகப் பேருண்மையை அறிந்து நமக்கு எடுத்துரைத்த ஞானிகளின் உபதேசங்கள் நம் உள்ளத்தே ப்ரக்ஞா பூர்வமாய் அறியப்பட்டு, ஆத்மிகப் பேருண்மை உதய ஞாயிறாய் உதிக்கின்றது.

நானே எதிர்பாராதவண்ணம், சில நாட்கள் முன்புவரை நான் விடை காணாது விழித்த வினாக்களும், பிரச்சனைகளும் தாமே முடிச்சு அவிழ்க்கப்பட்டு தெளிவாய் அறியப்படுகின்றன என்பதைக் காண்கிறேன். முதலில் இவற்றை என்னால் அறிவுபூர்வமாக ஆராய்ந்து, விடை கண்டறிய முடியும் என்னும் எண்ணம் அழிந்தது. மனித சமுதாய வளர்ச்சியில் பல்வேறு சமூகக் குழுவினர்க்கு கூறப்பட்ட நடைமுறைகளையும் வழிமுறைகளையும் இப்போதைய சூழ்நிலைகட்கு பொருத்திப் பார்க்க முடியும் என்பது எவ்வாறு அர்த்தமற்ற என்பதை என்னால் அறிய முடிந்தது. சில நாட்கள் முன்புவரைகூட இதைச் செய்ய முடியும் என்பதை நான் தீவிரமாக

நம்பி இருந்தேன். எப்படி சிரமப்பட்டாலும் ஒரு சௌகர்யமான ஆன்மிக ஔஷதத்தைக் கண்டறிந்து அதனை திருப்திகரமாகப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்பதில் நான் முனைப்புடன் இருந்தேன். இத்தகைய முயற்சிகள் பயனற்றவை; கும்மிருட்டில் ஒரு பொருளைத் தேடுதலை ஒத்த வீண் முயற்சிகள். அத்தகைய 'ரெடிமேட்' ஔஷதம் ஒன்றுமே இல்லை என அறிந்தேன்.

உண்மையில் ஒவ்வொரு மனிதனின் மனோ நிலைக்கும் ஏற்றவாறு, பல்வேறு ப்ரக்ஞை உணர்வுகள் வெவ்வேறு வகைகளில் வெளிப்பட்டுத் தோன்றுகின்றன என்பதை உணர்ந்தேன். எனது நண்பர் ஒருவர் ஒருமுறை கூறினார், ஒரே பொருளைப் பல்வேறு கோணங்களில் நோக்கும்போது அதனை அடையும் பல்வேறு பாதைகள் புலப்படுகின்றன. நாம் கற்கும் ஒவ்வொரு பாடமும் இறுதியில் பரமார்த்த ஸத்யத்தை நோக்கியே அழைத்துச் செல்கிறது. இங்ஙனம் ஆராயும்போதுதான், நான் செய்யும் அடிப்படைத் தவறை நான் உணர்கிறேன்.

நாம் எதை அறிய விரும்புகிறோம்? பல்வேறு விதமான பௌதிகத் தோற்றங்கள் என்ன என்பதை நாம் அறிய விரும்புகிறோமா? அல்லது அவை ஒவ்வொன்றும் நம் மனதில் ஏற்படுத்தும் தாக்கத்தை அறிய விரும்புகிறோமா? இங்ஙனம் செய்யப்படும் பௌதிகத் தாக்கம் சார்ந்த ஆராய்ச்சிகளால் பயன் ஏதும் இல்லை. ஏனெனில் நாம் காணும் ஒவ்வொரு பொருட் தோற்றமும், நம்மில் எழும் ஏதோ ஓர் எண்ணத்தால் தோற்றுவிக்கப்பட்டதே. ஒவ்வொரு எண்ணமும் ஒவ்வொரு தோற்றத்தை உருவாக்குகிறது. அதனை நாம் ஆராயத் தொடங்குகிறோம். இத்தகு எண்ணங்களின் கூட்டுக் கலவையையே நாம் அறிவு என்கிறோம்.

இந்த சுலபமான உண்மையை ஏன் மக்கள் அறிந்து கொள்ள முடிவதில்லை! பொருட்களிடையே தோற்றுவாய் குறித்த புறநிலை அறிவை உண்மையில் கண்டு அறிவது என்பது இயலாத செயல். இத்தகைய ஆராய்ச்சிக்கு முடிவே இல்லை. புறநிலை சார்ந்த அறிவை நாம் தேடத் தேட அது மேலும் நம்மை விட்டு அகன்று கொண்டே இருக்கிறது.

தேடலின் முடிவை யாராலும் கண்டறிய முடியாது. பகவான் கூறுகிறார், காலம் மற்றும் இடம் சார்ந்த தொடர் அளவைகளில் அறியப்படும் பொருட்களை நாம் அறிய முற்படுவது ஒரு பயனற்ற வேலை. தலை மொட்டை அடிக்கப்பட்ட ஒருவன் தலையிலிருந்து விடுபட்ட ஒவ்வொரு ரோமமும் என்ன ஆயிற்று என்று அறிய முற்படுவது போன்ற முட்டாள்தனமான வேலை. அந்த ரோமங்கள் ஒரு குப்பைத் தொட்டியில் போடப்பட்டு, பின் எரிக்கப்படும். எவன் தலையிலிருந்து அவை விடுவிக்கப்பட்டனவோ அவனுக்கும் அவற்றிற்கும் மீண்டும் தொடர்பே எழாது.

கடந்த காலம் என்பது ஒரு நிலையற்ற கற்பனையின் பொய்த் தோற்றம். அது மீண்டும் திரும்பாது. அது ஏற்படுத்திய நாடகத்தின் நடிகர்களாக இருந்தோர்க்கு அது மீண்டும் வந்து அறிவுறுத்தாது. இதனைக் கூர்ந்து காணும்போது மனிதர்கள் எவ்வாறு எதற்காக தம் வாழ்வில் துன்பத்தை சிருஷ்டித்துக் கொள்கிறார்கள் என்பதை அறிகிறோம். ஒரு பசு தான் உண்ட புல்லை அசைபோடுவதுபோல எப்போதோ மறைந்து போன அனுபவங்களை மீண்டும் மீண்டும் அசை போடுகின்றனர். தற்சமயம் என்பதின் பொருளையே அவர்கள் மறந்து விடுகின்றனர்.

இந்தக் கனத்தில் முற்றிலும் வாழ்வதை விட்டு கடந்த காலத்திலேயே உழன்றுகொண்டு இருக்கின்றனர். ஞான

எழுச்சி உதயமாகும்போது, இத்தகைய குறிக்கோளற்ற தேடல்களை அது முற்றிலுமாக நிறுத்துகிறது. என் எதிரில் இப்போது காட்சிதரும் மஹா ஞானி, இடம் காலம் போன்றவைகளைக் கடந்தவர் என்பதை நான் அறிவேன். அவர் தோற்றம் என் மனதில் ஓர் அளவற்ற ஆனந்தத்தை உருவாக்குகிறது. இதுவே நான் பெற்ற தீட்சை.

பகவானைப் பின்பற்றும் அடியவர்கள் எழுத்துக்களில் இருந்து பகவானின் வாழ்க்கைச் சரிதத்தை நான் முற்றும் அறிந்துள்ளேன். தனது குடும்பத்துடன் இளம் வயதில் இந்த பகவான், அறுபத்து மூன்று நாயன்மார்களின் உள்ளம் உருக்கும் சரிதங்களைப் பயின்றபோது தானும் அவர்களைப் போல் உயர வேண்டும் என்ற மீளா ஆசை அவர் உள்ளத்தே எழுந்தது என்பதை அறிந்துள்ளேன். அதேபோன்று நாம் மஹரிஷியைக் காணும்போது நாமும் அவர்போல ஆக வேண்டும் என்ற ஆன்ம தாகம் நம் உள்ளத்தே எழுகின்றது. இந்த உலகின் வேறு எதனுடனும் ஒப்பிட இயலாது ஒரு மஹாசக்தி, நம்மை நம்முடைய மிக உயர்ந்த லட்சியத்தை நோக்கிச் செல்ல ஊக்குவித்து, பகவானின் ஆத்மாவுடன் நம்மை ஒன்றச் செய்கிறது. ஒரு சில மனித்துளிகளே இந்த அற்புதக் காட்சி மெய்யாகிறது.

ஒரு ஆழ்ந்த மௌனம் நம்மை ஆரத் தழுவுகிறது. முழுவாழ்வும் இதில் சங்கமமாகிறது. இந்த வாழ்வைத் தாண்டிய ஒரு முழுமை, என்றும் மாறாத பேரானந்தத்துடன் கூடிய, குணங்களும் எல்லைகளையும் தாண்டிய ஒன்றில் நாம் ஒன்றுகிறோம்.

மேற்கத்திய நாட்டைச் சார்ந்த ஞானி ஒருவரின் கூற்றை நாம் மெய்யென உணர்கிறோம். அவர் கூறுகிறார், இறைவனும், மெய்யுணர்வும் எளிமையாகவும், அதேசமயம் கண்ணைக் கூசும் பேரொளியாகவும் அமைந்துள்ளன. ஒருவேளை



இறைவன் தன் முழு ஜாஜ்வல்யத்துடன் காட்சி தந்தால் எந்த ஒரு கோளும், மண்டலமும் அந்தப் பெரும் சக்தி வெளிப்பாட்டைத் தாங்க இயலாது சாம்பலாகிவிடும். இது ஓர் உருவகமாக இருக்கலாம். ஆயினும் இதில் ஒரு உண்மை அடங்கியுள்ளது என்பதை நான் அறிவேன்.

பகவானின் சரணங்களின் நிழலில், உலகுடன் நான் அமைதி பெற்றுள்ளேன். இவ்வுலகம் என்னை அச்சுறுத்தும் புறம் சார்ந்த ராட்சசனாக இனியும் தோன்றாது. அதனுடைய முடிவுறாத சிக்கல்கள் இனியும் என்னைக் குழம்புவதில்லை. இதுகாறும் நான் என்னிடமிருந்து வேறுபட்ட புனிதாத்மா என்று நான் எண்ணி இருந்தவர்கள் அங்ஙனம் வேறுபட்டவர்கள் அல்லர். என்னுள் அதிகம் ஆழ்ந்த மற்றும் என்னுள் மாறாத ஆன்மிக தத்துவத்தின் வெளிப்பாடே அவர்கள் அனைவரும் என்பதை நான் உணர்கிறேன். பகவானின் உபதேசமாகிய நீ ஆழ்ந்து உணர்வுபூர்வமாக சிந்திக்கும்போது, எல்லா தேசத்திலும் உறைவது ஒரே ஈசன்தான் என்பதை உணர்வாய் என்பது நம் உள்ளத்திலும் உதயமாகிறது. இதன்பின் என்னைவிட்டு என்றும் நீங்காத குரு தீட்சை தொடர்கிறது.

# ரமண மையங்களை நோக்கி...

## புனர்வசு வண்ணமும் புதுச்சேரி கேந்திரமும்

*காவ்ய கண்ட கணபதி முனிவர், பலராம ரெட்டியார், கபாலி சாஸ்திரியார், வக்கீல் துரைசாமி அய்யர், திலீப்குமார் ராய், கிருஷ்ண பிரேம் போன்ற ரமண அன்பர்களுடனும் மேலும் எண்ணற்ற சித்த புருஷர்களுடனும் தொடர்புடையது இந்தப் புண்ணிய புதுச்சேரி மாநிலம். அந்தப் புதுச்சேரி மாநிலத்தில் அமைந்திருக்கும் ரமண கேந்திரமானது பகவானின் திருவருளால் எப்போது, எவ்வாறு தொடங்கப்பட்டது என்றுதான் இம்முறை தெரிந்து கொள்ளப்போகிறோம்.*

*ஒரு குடும்பத்தில் உள்ள அனைவரும் பகவானை ஸ்தூல தேகத்தில் இருக்கும்போது தரிசனம் செய்துள்ளனர். அதே குடும்பத்தைச் சேர்ந்த ஒருவருக்கும் இந்த அரிய வாய்ப்பு கிட்டியுள்ளது. ஆனால் அதை நழுவ விட்டுள்ளதை எண்ணி பின்னர் வருந்தியுள்ளார். அதனால் என்ன அவரைக் கொண்டே இந்த கேந்திரமானது துவங்கப்பட்டது என்று கேட்கும் போது பகவானின் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்றுதான் போல என்று எண்ணத் தோன்றியது. மேலும் தன்னுடைய போதனைகளைப் பற்றியும், தான் இயற்றிய அருணாசல அக்ஷரமணமாலையை புதுச்சேரி, விழுப்புரம், காரைக்கால் போன்ற ஊர்களிலும் சென்றடைய இவரைக் காரணியாக பகவான் பயன்படுத்தியுள்ளார் என்பது கூடுதல் சிறப்பு.*

*2007-ஆம் ஆண்டு அருண விஜய யாத்திரைக்கு மதுரையிலிருந்து திருவண்ணாமலைக்குச் செல்லும் போது விழுப்புரத்தில் வழக்கம்போல் ஆகஸ்ட் 31-ஆம்*

தேதி அதிகாலையில் தினசரி பாராயணத்திற்குப் பிறகு பயணத்தைத் துவக்கயிருந்தோம். அன்று புதுச்சேரி ரமண கேந்திர பக்தர்கள் நாங்கள் தங்கியிருந்த இடத்திற்கே வருகைபுரிந்து மதுரையில் இருந்து கலந்து கொண்ட அனைத்து பக்தர்களுக்கும் காலை உணவு தயாரித்துக் கொடுத்தனர். மேலும் அனைவருக்கும் பகவான் பிரசாதமாக ஜோல்னா பை, தொப்பிகள் வழங்கி எல்லோரையும் திகைப்பில் ஆழ்த்தியிருந்தனர். அன்றுதான் முதன்முறையாக திரு.சந்திரசேகர் என்பவரைத் தரிசிக்கும் பாக்கியத்தை பகவான் வழங்கினார்.

மயிலாடுதுறையில் 1937-ஆம் ஆண்டு திரு.சாம்பசிவம்-விசாலாக்ஷி தம்பதியினருக்கு மகனாகப் பிறந்த திரு.சந்திரசேகர் அவர்கள் இளவயதிலே ஆன்மிகத்தில் அதிக நாட்டத்துடன் காணப்பட்டார். இவருடைய தாய்மாமா திரு.R.K.விஸ்வநாதன் அவர்கள் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்து வந்துள்ளார். அவரே இவரை முதன்முறையாக திருவண்ணாமலைக்கு அழைத்துச் சென்றுள்ளார். அப்போது அண்ணாமலையார் தரிசனம், கிரிவலம் வருவது என்றே சென்று வந்துள்ளனர். மேலும் பகவானைப் பற்றியோ, ரமணாஸ்ரமத்தைப் பற்றியோ இவர்கள் அறிந்திருக்கவில்லை.

சில ஆண்டுகள் கழித்து பணியின் காரணமாக இந்தக் குடும்பமானது பெங்களூருக்கு மாறுதல் ஆகியபோதுதான் திரு.சந்திரசேகர் அவர்களின் மூத்த சகோதரர் வெங்கட்ராமன் அவர்கள் ஒரு நதி வெள்ளத்தில் சிக்கி உயிரிழந்துள்ளார்! தந்தை மற்றும் மூத்த சகோதரர் இல்லாத குடும்பத்தின் சுமை இவர் மீது விழுந்தபோதிலும் இவர் தாய் மன உறுதியுடன் குடும்பத்தை வழிநடத்திச் சென்றுள்ளார். பள்ளி,

கல்லூரிக் கல்விகள் முடிந்தபிறகு ஒரு தனியார் மருந்து விற்பனை செய்யும் நிறுவனத்தில் வேலை கிடைத்துள்ளது. அதன் காரணமாக இவர் தன் குடும்பத்தினருடன் சென்னைக்கு மாறுதலாகிச் செல்ல வேண்டிய நிலை வந்துள்ளது. அதன்பின்னர் 1964-ஆம் ஆண்டு சென்னையிலே தனியாக ஒரு நிறுவனம் தொடங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. 1966-ஆம் ஆண்டு திருமணம் முடிந்துள்ளது. தொழில் சிறப்பாகச் சென்று கொண்டிருக்கும்போது இவருடைய நண்பர் திரு. ஞானசம்பந்தம் அவர்கள் இவரை புதுச்சேரியில் வந்து தொழில் துவங்குமாறு ஒரு அன்புக் கட்டளையிட்டுள்ளார். அதன் பொருட்டு 1973-ஆம் ஆண்டு புதுச்சேரியில் ஒரு நிறுவனத்தைத் தொடங்கினார்.

பகவானைப் பற்றியோ அவரின் போதனைகளைப் பற்றியோ அவ்வளவாக அறிமுகம் இல்லாத போதிலும் (1980-களில்) தொழிலுக்கு மத்தியிலும் குடும்பத்தினருடன் திருவண்ணாமலை ரமணாஸ்ரமம் செல்வது அண்ணாமலையார் தரிசனம், கிரிவலம் வருவது என்று ஆன்மிக வாழ்விலும் சமமாகப் பயணித்துள்ளார். மேலும் ஆஸ்ரமம் செல்லும் போது நாராயண சேவைக்கு இனிப்புகள், ஊறுகாய் தயாரித்துச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தார். தற்போது மணக்குள விநாயகர் தெருவில் அமைந்துள்ள ரமணாஸ்ரம தபால் நிலையம் அருகில் தான் இவருடைய தாய்மாமா திரு.விஸ்வநாதன் அவர்களுடைய இல்லம் இருந்துள்ளது. அங்குதான் அப்போதைய காலகட்டத்தில் தங்கிவந்துள்ளனர். தன் தாயின் மீது அளவு கடந்த அன்பு கொண்டிருந்தார். இதன் காரணத்தினால் 1987-ஆம் ஆண்டு இவருடைய தாயார் மறைவிற்குப் பின் வாழ்வில் ஏதோ ஒரு வெறுமையை உணர்ந்துள்ளார். வாழ்க்கை என்பது ஏதோ இத்துடன் முடிந்து விட்டது போலவே

உணர்ந்துள்ளார். நிறுவனத்தை வேறொருவரிடம் கொடுத்துவிட்டு ஏகாந்தமாக எங்கேயாவது சென்று விடலாம் என்ற எண்ணம் மேலோங்கியிருந்துள்ளது. ஆனால் தன்னை நம்பி குடும்பத்தினர், தொழிலாளர்கள் இருப்பதால் இந்தப் பயணமானது தள்ளிக்கொண்டே சென்றுள்ளது.

1994-ஆம் ஆண்டு தோளில் ஒரு பையை மாட்டிக் கொண்டு நான் ஆன்மிகத் தேடலில் இந்தப் பயணத்தைத் துவக்குகிறேன். எங்கு எனக்கு மன அமைதி ஏற்படுகிறதோ அங்கேயே தங்கிக் கொள்கிறேன் என்று வீட்டினரிடம் கூறிவிட்டுப் புறப்பட்டுள்ளார். முதலில் இவர் சென்ற இடம் திருவண்ணாமலை ரமணாச்ரமம். அயல்நாட்டினருக்கே அளவில்லா அமைதி கிடைக்கும் இடம். அடுத்த ஊரினருக்கா அமைதி கிடைக்காது. அப்போதைய தலைவர் திரு. சுந்தரண்ணா இவரை அழைத்து குஞ்சு சுவாமிகள் தங்கியிருந்த அறையின் சாவிகளை இவருக்கு அளித்துள்ளார். அன்றுதான் ஆஸ்ரம பணியாளர் திரு.T.V.சந்திரமௌலி அவர்களின் அறிமுகமும் இவருக்குக் கிடைத்துள்ளது.

அதன்பின்னர் புதுச்சேரிக்கும் திருவண்ணாமலைக்கு மான இவரின் பயணமானது அதிகரிக்கத் துவங்கியுள்ளது. ஆன்மிக வாழ்வில் இருந்தாலும் குடும்பத்திற்கான கடமைகளைத் தவறாமல் செய்து வந்துள்ளார். 2005-ஆம் ஆண்டு ஒருமுறை சென்னைக்கு தன்னுடைய புதல்வியின் இல்லத்திற்கு செல்லும் முன் ஒரு உணவகத்தில் காபி சாப்பிட்டு விட்டுக் கிளம்பலாம் என்று எண்ணி காரை உணவகத்தின் எதிரே நிறுத்தி விட்டு சாலையைக் கடக்க முயலும்போது காலணிகள் வாரிவிட்டு சாலையிலே விழுந்துள்ளார். அப்போது அந்தச் சாலையில் வேகமாக வந்த பேருந்து, ஓட்டுநரின் சாமர்த்தியத்தினால் (பகவான் கருணை) இவருக்கு அருகே வந்து நிறுத்தப்பட்டுள்ளது. இவருக்குப் பின்னால் வந்து கொண்டிருந்த இவரின் மனைவி

இந்தச் சம்பவத்தைக் கண்டு மிகவும் கதறியுள்ளார். பேருந்தை விட்டு இறங்கி வந்த அந்த ஓட்டுனர் மிகவும் கனிவாக இவரை எழுப்பி சாலையின் மறுபுறம் செல்ல உதவியுள்ளார். அந்த நொடிப்பொழுதே இந்த மறுவாழ்வு பகவான் எனக்களித்த பிக்ஷை. அவருக்கென்று புதுச்சேரியில் ஒரு கோவிலைக் கட்டியே தீர வேண்டும் என்ற எண்ணம் உதித்துள்ளது.

பகவானுக்கு என்று ஒரு தனிக்கேந்திரம் துவங்குவது என்று முடிவு செய்தபின் புதுச்சேரியிலிருந்து வெளிவரும் நாளேடுகளில் ஒரு விளம்பரம் தரப்பட்டது. அதில் புதுச்சேரியில் பகவான் ரமணருக்கென்று ஒரு கேந்திரம் துவங்கப்போவதை முன்னிட்டு நகரில் வாழ்கின்ற அனைத்து ரமண அன்பர்களும் இதில் தவறாமல் கலந்து கொள்ள வேண்டுமென்று ஒரு அன்பு அழைப்பு விடப்பட்டது. சுமார் 40-க்கும் மேற்பட்ட அன்பர்கள் இதில் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சிற்குப் பின்னரே BRAMADESAM Bhagavan Ramana Maharshi Devotees Seva Ashram 2005-ஆம் ஆண்டு தொடங்கி 2007-ஆம் இனிதே துவங்கப்பட்டது. மார்கழி மாதங்களில் தினமும் காலையில் பகவானின் புகைப்படத்தை ஒவ்வொரு சிவன் கோவிலாக எடுத்துச் சென்று அன்பர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அருணாசல அக்ஷரமணமாலையைப் பாராயணம் செய்து, கலந்து கொள்ளும் அனைத்தும் அன்பர்களுக்கும் பகவான் பிரசாதம் வழங்கப்பட்டு வந்தது. இந்நிகழ்ச்சி நகர சங்கீர்த்தனம் என்று பெயருடன் சில ஆண்டுகள் நடைபெற்று வந்தது. இதன் பின்னர் வில்லியனூரைச் சேர்ந்த திரு.சேகர் என்ற சிற்பக்கலைஞரைக் கொண்டு ஒரு பகவான் சிலை (உற்சவ மூர்த்தி) செய்யப்பட்டது. ஒரு சிறிய தேர் போன்று வடிவமைக்கப்பட்ட ஒன்றில் பகவானின் சிலை வைக்கப்பட்டு அப்போது திரு.சந்தரசேகர் அவர்களிடம் இருந்த Tata Estate காரின்

*மீது இந்தச் சிறிய தேரை வைத்து நகர்வலம் வரத் தொடங்கியுள்ளனர்.*

*அதன்பின்னர் கடலூரில் உள்ள TVMS என்ற பேருந்து நிறுவனத்தினரிடம் ஒரு Matador வேன் வாங்கித் தந்துள்ளனர். அதை அவர்கள் ஒரு அழகிய ரமண ரதமாகவே மாற்றியமைத்துள்ளனர். இந்த ரதத்தைக் கொண்டே ஒவ்வொரு மாத பிரதோஷத்தன்று புதுச்சேரி மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு ரதத்தை எடுத்துச்சென்று அருணாசல அக்ஷரமணமாலை பாராயணம் மற்றும் பகவானின் போதனைகளிலிருந்து சொற்பொழிவுகள் நடைபெற்று வந்துள்ளது. 2007 முதல் 2010 காலகட்டங்களில் புதுச்சேரி, விழுப்புரம் மற்றும் காரைக்கால் பகுதிகள் அனைத்தும் விழாக்கோலாமாக காட்சியளிக்குமாம். கிராமங்களுக்குச் செல்லும் ஒரு வாரத்திற்கு முன்னரே அந்தந்த கிராம நிர்வாகிகள் மற்றும் பொதுமக்களுக்கு அறிவிப்பு விடுக்கும் விதமாக சுவரொட்டிகள் ஒட்டப்படும். 2011-ஆம் ஆண்டு திரு.சந்திரசேகர் அவர்களின் உடல் நிலை சரியில்லாமல் போன காரணத்தினால் இந்த ரத யாத்திரை தடை பெற்றது. தொடர்ந்து நடைபெறாததால் அந்த ரதமானது இப்போது இவர்களுடைய குல தெய்வக் கோவிலுக்குத் தரப்பட்டுள்ளது.*

*மேலும் புதுச்சேரி ரமண கேந்திரத்தில் ஒரு அழகிய பகவான் சிலையை இன்றும் நாம் காண முடிகிறது இந்த அழகிய பகவான் கல் சிலையானது திருவண்ணாமலையில் இருந்து வேலூர் செல்லும் வழியில் உள்ள முகையூர் என்ற கிராமத்தில் செய்யப்பட்டுள்ளது. மேலும் அதன் அருகில் ஒரு சிறிய பகவான் சிலை கும்பகோணத்தில் செய்யப்பட்டுள்ளது. தினசரி அதிகாலை அக்ஷரமணமாலை பாராயணம் மற்றும் பூஜைகள் தவறாமல் நடைபெற்று வருகிறது. தினமும் காலையில் சுமார் 40 அன்பர்களுக்கு நாராயண*

சேவை (அன்னதானம்) வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாத புனர்வசு தினத்தன்று சுமார் 100 அன்பர்களுக்கு பகவான் பிரசாதம் வழங்கப்பட்டு வருகிறது.

பகவான் ரமணரின் அன்பர்களில் ஒருவரான T.R.கனகம்மா அவர்கள் இரண்டு முறை இங்கு வந்து தங்கி பகவான் தேகத்தோடு இருந்த காலகட்டங்களில் நடைபெற்ற சம்பவங்களை சுவைபட எடுத்து கூறினாராம். மேலும் புதுச்சேரி முதலமைச்சர் மற்றும் மத்திய மாநில அமைச்சர்கள் பலர் பகவான் ரமண ஜயந்தி, ஆராதனை விழாக்களுக்குத் தவறாமல் கலந்து கொள்வார்களாம்.

திருவண்ணாமலையில் வசிக்கும் ரமண அன்பர்கள் தங்களுடைய மருத்துவ சிகிச்சைக்காக புதுச்சேரிக்குச் செல்லும்போது இங்கு வந்து தங்கிக்கொள்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். மேலும் இந்தக் கேந்திரத்தின் மூலமாக கல்வி உதவி மற்றும் மருத்துவ உதவி தொடர்ந்து நடைபெற்று வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

திரு.சந்திரசேகர் அவர்களுக்கு 3 ‘அ’ க்கள் மீது அதீத விருப்பமாம். அது 1) அம்மா 2) அருணாசல அக்ஷரமண மாலை 3) அன்னதானம் (முன்னர் சபரிமலைக்கு 40 ஆண்டுகள் தொடர்ந்து யாத்திரை மேற்கொண்டு வந்த பழக்கத்தினால்).

திரு.சந்திரசேகர் அவர்கள் தன்னுடைய சிறு வயதில் குடும்பத்தினருடன் சிதம்பரத்தில் வாழ்ந்து வரும் பொழுது அவரது தாயார் இவரை வலுக்கட்டாயமாக திருவண்ணாமலை அண்ணாமலையாரை தரிசனம் செய்ய அழைத்துச் செல்வாராம். அப்படி ஒருமுறை இவர் சென்றிருந்தபோது கோவிலில் தரிசனம் முடித்துவிட்டு கிரிவலம் வந்து ரமணாஸ்ரமத்தை கடக்கும்போது இவரிடம் இவரின் தாயார்

“டேய் வாடா! உள்ளே ரமண பகவான் உள்ளார். தரிசனம் பண்ணி விட்டு வரலாம். என்னைப் பல இடங்களில் உள்ளே விடமாட்டார்கள் (கணவனை இழந்தவர் என்ற காரணத்தினால்). இங்கு அந்தப் பிரச்சனையே இல்லை” என்று அழைத்துள்ளார். அதற்கு இவர், “நீங்கள் என்னிடம் என்ன சொல்லி அழைத்து வந்தீர்கள்? கோவிலுக்குச் சென்றுவிட்டு கிரிவலம் வந்து சிதம்பரத்திற்குத் திரும்பிச் செல்ல வேண்டும் என்றுதானே! இங்கு வந்தவுடன் இப்படிப் பேச்சை மாற்றுகிறீர்களே” என்று கடிந்துகொண்டு நான் கண்டிப்பாக உள்ளே வரமாட்டேன் என்று அடம்பிடித்துள்ளார். ஆனால் பின்னாட்களில் இந்தச் சம்பவத்தை நினைத்து மிகவும் வருந்தியுள்ளார். அதனால் என்ன! அவரைக் கொண்டே இவ்வளவு ரமணாய பணிகளைச் செய்ய வைத்துவிட்டார் என்பது அவரின் பரிபூரண கிருபையே.

திருவண்ணாமலை ரமணாஸ்ரம பணியாளர்களில் ஒருவரான பேரா.திரு.P.ராமசாமி அவர்கள் (மாலை 4.30-5.00 மணிக்கு பகவான் ஆங்கில புத்தகங்களை வாசிப்பவர்) புதுச்சேரி ரமண கேந்திரத்தைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக இவர்கள் குடும்பத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கும் திரு.அனந்தன் அவர்களே இந்த ரமண கேந்திரத்தின் மேலாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

திரு.சந்திரசேகர் அவர்கள் இவ்வுலகத்தை விட்டு உடலோடு மறைந்தாலும் இன்றளவும் ஆயிரக்கணக்கான அன்பர்களின் கைகளிலும் சுவாசத்திலும் பயணித்துக் கொண்டுதான் இருக்கிறார். பொள்ளாச்சி மலையாண்டிப்பட்டணத்தைச் சேர்ந்த திரு. பாலசுப்ரமணியம் அவர்கள் வழங்கும் அக்ஷரமணமாலை புத்தகங்களின் விளக்கவுரை




எழுதியவர் திரு.சந்திரசேகரே ஆவார். ஒவ்வொரு தனி மனிதரிடமும் இந்தப் புத்தகம் போய்ச் சேர வேண்டும் என்று திரு.பாலு அவர்களிடம் இவர் ஒரு அன்புக் கட்டளை இட்டாராம். அந்தக் கனவு இப்போது கண்முன்னே நிஜமாகிக் கொண்டிருக்கிறது.

1937-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 15-ஆம் தேதி பிறந்த திரு.சந்திரசேகர் அவர்கள் 2012-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 26-ஆம் தேதி பகவான் திருவடிகளில் கலந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேற்படி கட்டுரைக்கான தகவல்கள் அனைத்தும் திருமதி. சாந்தா சந்திரசேகர் அவர்களிடம் கடந்த வருடம் அக்டோபர் மாதம் 2-ஆம் தேதி (காந்தி ஜயந்தி) அன்று புதுச்சேரி ரமண கேந்திரத்தில் பதிவு செய்யப்பட்டது.

மீண்டும் ஒரு ரமண குடும்பத்தினருடன் விரைவில் பயணிப்போம்.

# சுகம்: யாது, எங்கே, எதனிடம், எங்ஙனம்? – பகவான்

**டாக்டர் S. ராமகிருஷ்ணன்**

உலகில் அனைத்து மக்களும், ஏன் எல்லா ஜீவிகளுமே வாழ்வின் குறிக்கோளாக அனுபவிக்க விரும்புவது ஆனந்தத்தையே. பொருள், புகழ், செல்வம், பதவி, பட்டங்கள் எவையாயினும் அவற்றின் மூலம் கிடைக்கும் ஆனந்தம்தான் அங்கு முக்கியம். உபநிஷதத்தில் ஆனந்தம், சுகம் என இரு சொற்களும் ஒரே அர்த்தத்தில் உபயோகப்படுத்தப் பட்டிருக்கின்றன. கடோபநிஷத்தில் *'தம் ஆத்மஸ்த2ம் யே அனுபஶ்யந்தி தீ4ரா: தேஷாம் ஸுக2ம் ஶாஶ்வதம்'* என்று கூறப்படுகிறது. ஸ்ரீமத் பகவத்கீதையில், பகவான் சொல்வது: *'அஶாந்தஸ்ய குத: ஸுக2ம்'* என்று. இதையே ஸ்ரீமத் பாகவத மஹாபுராணத்தில் விதுரர் மைத்ரேயரிடம் கேட்கும்போது *'ஸுகா2ய கர்மாணி கரோதி லோக:* என்று ஆரம்பிக்கிறார்.

எல்லோரும் அறிய, அடைய, அனுபவிக்க விரும்பும் சுகத்தைப் பற்றி பகவான் ஸ்ரீரமண மகரிஷி "சுகமாவது யாது" என்ற தலைப்பில் 'நான் யார்?' ஆகிய அருண்மொழியில் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் விளக்கியுள்ளார். சிறுநூல் ஆனாலும் மலையளவு ஆத்மவிசாரம். அதை ஆதாரமாகக் கொண்டுதான் இக்கட்டுரை வளர்கிறது.

**சுகமாவது யாது?** எனும் கேள்விக்கு, பகவான் ரமணர் அருளித்தரும் விளக்கம் "சுகமென்பது ஆத்மாவின் சொரூபமே; சுகமும் ஆத்மஸ்வரூபமும் வேறன்று" (நான் யார்? கேள்வி. 24). ஆத்மாதான் எல்லா ஜீவராசிகளும் உயிர் வாழ்வதற்கான அதிஷ்டானமான

அடிப்படை வஸ்து. வற்றாத ஆனந்த அமுதக்கடலாகத் திகழ்கிறது. (ஆனந்த ஆத்மா; தைத்திரீய உபநிஷத்) “ஆனந்தோ3 ப்3ரஹ்மேதி வ்யஜானாத்”.

ஆத்மாவின் ஸ்வரூபத்தில், ஆனந்தத்துடன் சத், சித் என இரண்டு அம்சங்களுடன், ஆத்மா சத்சித் ஆனந்த ஸ்வரூபி எனப்படுகிறது. சத் என்றால் உண்மைப்பொருள்; சித் என்பது உள்ள உணர்வு. ஆத்மாவே சத்யம்,சிவம், சுந்தரம். Reality, Consciousness, Bliss; அங்கு, பாதி, ப்ரியம். நித்ய, சுத்த, புத்த, முக்த பூர்ண வஸ்து. ஸ்வயம் பிரகாசமானது அஹம், நான், தான் எனவும் குறிப்பிடப்படுகிறது.

மேற்குறிப்பிட்ட சத்தான உண்மைப் பொருளாகவும் சித் ஆகிய சைதன்யம் எனும் உள்ள உணர்வாகவும் எல்லா உயிரினங்களிலும் வேறுபாடின்றிப் பிரகாசிக்கிறது. வாழ்வளிக்கிறது. சித்தாக ஆட்சிபுரியும் சைதன்யம் - அதுவே ஆத்மா, பிரும்மம் - நான்முக பிரும்மா முதல் சிறு எறும்புவரை எல்லோரிடமும் மாறுபாடற்ற ஒரே வஸ்து.

உடம்பிற்குள் ஆத்மா எங்கே உள்ளது? எங்கே?

அங்கெங்கெனாதபடி பார்க்குமிடமெல்லாம் நீக்கமற ஸ்வயம் சித்தமாக பட்டொளி வீசும் இந்த ஆத்மாவை எப்படி தியானம் செய்வது? அதற்காக வேதம் ஸ்ரீநாராயண சூக்தம் சொல்கிறது. உடல் உறுப்பில்லாத - ஆன்மீக மார்பின் வலது பக்கமாயுள்ள இருதயத்தில்தான் இது வீற்றிருக்கின்றது. “பத்3ம கோஶ ப்ரதீகாஶம் ஹ்ருத3யம் ச அபி அதோ3முக2ம்”. பகவான் மஹர்ஷியும் அதையே (உள்ளது நாற்பது அனுபந்தம்-8)

இதயமாம் குகையின் நாப்பண் ஏகமாம் பிரும்ம மாத்ரம்
அதுஅகம் அகம்ஆய் நேரே அவிர்ந்திடும் ஆன்மாவாக

என்கிறார். அங்கிருந்து கொண்டுதான் அது ‘அஹம், அஹம்’ ‘நான் நான்’ என ஜீவியின் வாழ்வு முழுதும்,

தன் இருப்பைப் பறைசாற்றுகிறது. ஜாக்ரத் (விழிப்பு), சொப்ன, சுஷுப்தி (ஆழ்ந்த சொப்பனமற்ற தூக்கம்) ஆகிய மூன்று அவஸ்தைகளிலும் சத் சித் ஆனந்த ஸ்வரூபமாகத் திகழ்கிறது. மனமானது ஹ்ருதயத்திற்குள் உள்ள ஆத்மாவைப் பற்றினால்தான் சுகம். அதை அடைய முக்கியமாகச் செய்ய வேண்டிய பணிகள் இரண்டு. முதற்கண் அதை நோக்கி மனத்தைத் திருப்ப வேண்டும்.

*மதிக்கு ஒளிதந்து அம்மதிக்குள் ஒளிரும்*
*மதியினை உள்ளே மடக்கிப் பதியில் பதித்திடுதல்*
*(உள்ளது நாற்பது, 23)*

பின் சுஷிரம் எனும் துவாரத்திற்குள் நுழைந்து உள்ளே சென்று ஹ்ருதயக் குகையினுள் ஆத்மாவுடன் லயமடைந்து சுக ஸ்வரூபியாதல்.

*தஸ்யாந்தே சுஷிரம் ஸூக்ஷ்மம் தஸ்மின் ஸர்வம் ப்ரதிஷ்டி2தம் (தைத்தரீய உபநிஷத், நாராயண சூக்தம்)*

**சுகம் எதனிடமிருந்து?**

அடுத்தபடியாக பகவான் அனுக்கிரஹிப்பது, சுகத்தை எதனிடமிருந்து அனுபவிக்கலாம் என்பதே. எப்படிப்பட்ட சுகமானாலும் சரி. அன்றாட சிறு சிறு சுகங்களோ, அளவிடமுடியாத சுகமோ, எல்லாமே அவரவர் ஸ்வரூபமான ஆத்மாவினின்று மட்டும்தான் கிடைக்கின்றன. தனக்கு வெளியே உள்ள எந்தப் பொருட்களிலும் - விலை உயர்ந்த அல்லது குறைந்த வஸ்துக்கள், ஸ்தாவர ஜங்கமங்கள் சொகுசு சாதனங்கள் சக மனிதர்கள் - ஒருவரிடமும் சுகம் கிடையாது. சுகம் நம் உள்ளே இருக்கிறது. வெளியே பிரபஞ்சத்தில் கிடைப்பது துக்கமே என்கிறார் பகவான்.

*திரும்பி அகந்தனை தினம் அகக்கண்காண்*
*தெரியும் என்றனைஎன் அருணாசலா*
*(அருணாசல அக்ஷரமணமாலை, 44)*

*உள்ளே சுகம் என்பதற்கு அரிய சான்று:*

*உள்ளேதான் சுகம் உள்ளது என்பதற்கு நாம் ஒரு முயற்சியும் செய்யாமல் நாள்தோறும் ஆசையோடு அனுபவிக்கும் சொப்பனமற்ற ஆழ்ந்த தூக்க நிலையே அரிய சான்று. இதுவே சுஷுப்தி எனப்படுகிறது. அவ்யாஜ கருணாமூர்த்தியாகிய கடவுள் ஒரு பிரதிபலனையும் எதிர்பார்க்காமல் நமக்கு அருளியிருப்பது இந்த ஆழ்ந்த தூக்கத்தையே. இதில் உள்ளபடியே பிரும்மானந்த அனுபவமே ஏற்படுகிறது. சுகமாகத் தூங்கினேன் என்று சொல்வதால் சுகம் அங்குதான் இருக்கிறது. இந்திரியங்கள், மனது, ஜீவாகந்தை, சரீரம் எல்லாம் அடங்கி, சூழ்நிலை, வீடு வாசல் உற்றார் உறவினர் சொத்து பந்தபாசம் எல்லாம் அகன்றநிலை. ஆத்மா ஒன்றே பிரகாசித்து சுகானுபவத்தில் நிலைத்திருக்கிறது. ஒரு பொருளையும் பெறாமலும் தன்னிடத்தில் உள்ள உடைமைகளை விட்டபின்பும் சுகம் கிடைக்கிறது என்றால் அது உள்ளேதானே இருக்க வேண்டும்.*

*எவ்வளவு நேரம் தூங்கினாலும் இச்சுகம் நீடிக்கிறது. ஒரே ஒரு துர்பாக்கியம் - நித்திரையாகிய ஆவரணத்தின் காரணமாகத் தூங்கும்பொழுது, சுகானுபவத்தை ரசிக்க முடியாது; ருசிக்க முடியாது. தூங்கி எழுந்தபின்தான் "நான் சுகமாகத் தூங்கினேன்" என்ற திருப்தி ஏற்படுகிறது. மேலும் மேலும் தூங்க ஆசையும் உண்டாகிறது. போராட்டங்கள் பல செய்யப்பட்டாலும் "எங்கள் குறைகள் நிறைவேறும்வரை தூங்கமாட்டோம்" என்ற போராட்டத்தைப் பற்றி மட்டும் கேள்விப்பட்டதே இல்லை.*

*சுஷுப்தியில் ஏற்படும் ஆத்ம சுகமும் வேண்டும். அதே சமயம் சுகத்தை அனுபவித்து அதில் கரைந்துவிட வேண்டும். சுகமாகவே ஆகிவிட வேண்டும். முடியுமா என்றால் அதுதான் சமாதியில் ஏற்படுகிறது. அங்கு*

*விழித்தநிலை. நித்திரையின் ஆவரணம் இல்லை. சுகம் மட்டுமே ரஸானுபவமாகிறது. தூக்கத்தின் சுகத்தைத் தூங்கும்பொழுதே தூங்கிக்கொண்டே அனுபவிக்கும் நிலை!*

*சுஷுப்தி, சமாதி நிலைகளில் எங்ஙனம் ஆத்ம சுக அனுபவம் உண்டாகிறது?*

## மனமும் ஜீவாஹந்தையும்

## (சுகத்தை அடையவிடா எதிரிகள்)

*ஒவ்வொருவரின் சித்சட கிரந்தியின் மனமும் அதன் மூலம் உண்டாகும் முதற்கண் எண்ணமாகிய போலி நானாகிய நான் எனும் ஜீவாஹந்தையாகிய அஹங்காரமும் தொடர்ந்து செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. Talks-இல் பகவான் சொல்வது "நம் வாசனைகளை எல்லாம் மனதுதான் மூளையில் எண்ணங்களால் மாற்றுகிறது." ஜீவாகந்தை, மனம் எண்ணங்கள் அனைத்தும் அஞ்ஞானத்தை உண்டுபண்ணி சூரியனை மேகம் மறைப்பதுபோல், அழகான படத்தைத் திரை மறைப்பதுபோல், உடல் உள்ளேயே இருக்கும் ஆனந்த ஸ்வரூபியான சித்தை நினைக்கவிடாமல் செய்து விடுகின்றன. 'சரீரமே நான்' என்ற சரீராத்ம பாவத்தை உண்டு பண்ணிவிடுகின்றன. ஆகவே ஆத்ம சுகானுபவம் பெற எதிரிகளான நம்மிடமே உள்ள மனம், ஜீவாஹந்தையாகிய நான் எனும் அஹங்காரம் ஆகியவற்றை அடக்கினால்தான் அஞ்ஞானம் நீங்கி ஆத்ம சுகத்தில் கரையும் நிலை ஏற்படும். சுஷுப்தியிலும் சமாதியிலும் மனமும் ஜீவாகந்தையாகிய அஹங்காரமும் சித் ஆகிய ஆத்மாவின்பால் தள்ளப்பட்டு சுஷிரம் வழியே நுழைந்து ஆத்மாவில் லயமாகி செயலிழந்து விடுகின்றன.*

*பரோ ஹி யோகோ3 மனஸ: ஸமாதி:*

*(ஸ்ரீமத் பாகவதம், 11-23-46)*

எல்லாவற்றிற்கும் மேலான யோகம் மனத்தை அடக்குவதே. எவ்வளவு நேரம் மனம் அடங்கியுள்ளதோ அவ்வளவு நேரமும் ஆத்மசுக அனுபவம் நிலைக்கும்.

சுஷுப்தியில் ஆனந்தம் உண்டு. ஆனால் அனுபவம் இல்லை. காரணம் உறக்கம் என்ற ஆவரணம் சூழ்ந்த நிலை. விழித்த உடன் சுகமாகத் தூங்கின அனுபவ அறிவும் மேலும் தூங்கவேண்டும் என்ற ஆசையும் உண்டாகின்றன.

சமாதிநிலை ஆத்ம ஆனந்தம். அத்துடன், உறக்கம் இல்லா விழிப்பில் இருப்பதால் ஆவரணம் இல்லை. அதனால் சமாதியில் இருக்கும் முழுநேரமும் ஆத்ம சுகமாகவே ஆகிவிடுதல். இதுவே நம் குறிக்கோளாக இருந்து நதிகள் கடலில் கலந்து ஒன்றாகி விடுவதுபோல் ஆனந்த ஆத்மாவில் கரைந்து நாமரூபங்களை விட்டு, ஒன்றாகி விடவேண்டும் (முண்டக உபநிஷத்)

ததா2 வித்3வான் நாமரூபாத்3 விமுக்த:

பராத்பரம் புருஷமுபைதி தி3வ்யம்

ஒருவர் குறைவான நேரங்கட்கு மட்டும் சமாதி நிலையில் இருக்கலாம். அப்பொழுது மனது அடங்கிய அந்நேரத்தில் மட்டுமே சுக அனுபவம் ஏற்படும்.

## வேறுமுறைகளில் மனஅடக்கம்

பிராணாயாமம் செய்யும்கால் மனம் அடங்கிவிடும். மனம் சூக்ஷ்ம சரீரம். அது செயல்பட இடத்திற்கு இடம் மாற, வாஹனம் தேவை அதுதான் பிராணன். பிராணன் ஸ்தூலம். மனோவாஹனன் மனம் அடங்கினால் ப்ராணன் அடங்கும். பிராணன் அடங்கினால் மனம் அடங்கும். ஆகவே, பிராணாயாமம், அந்த நேரத்திற்கு மட்டுமே ஆத்ம சுகத்தைப் பெற்றுத் தரும்.

## அழகு

*அழகான பொருட்களைப் பார்த்தால் மனம் அடங்கிவிடும். ஆனால் மேலும்மேலும் அழகானவற்றைத் தேடி ஊர்சுற்றும் பகவான் ரமணர் அக்ஷரமணமாலையில் பிரார்த்திப்பது*

*ஊர்சுற்று உளம்விடாது உனைக்கண்டு அடங்கிட*

*உன்அழகைக் காட்டு அருணாசலா*

*(அருணாசல அக்ஷரமணமாலை, 8)*

*உதாரணமாக, ஸ்ரீமத் பாகவதத்தில் பிரும்ம மோஹனத்தில் எல்லா இடையர்களும் அவர்கள் பிள்ளைகளைக் கண்டிக்க நினைக்கும்போது, அவர்கள் இதயத்தில் அன்பு சுரக்கிறது. காரணம் கண்ணன்தான் பிள்ளைகளாக மாறியிருக்கிறான். அதனால் பிள்ளைகளிடம் கண்ணனாகிய புவன சுந்தரனின் அழகு இடையர்களை அன்பினால் அணைத்து விடுகிறது. அவர்தானே சத்யம், சிவம், சுந்தரம். இடையர்கள் மனம் அடங்கி சுகம் பெறுகின்றனர். அதேநிலையில்தான் பசுக்களும், அவற்றிற்கு முதலில் ஈன்ற கன்றுகளைவிட இரண்டாவது ஈன்ற கன்றுகளே சுகானுபவத்தைக் கொடுக்கின்றன. காரணம், எப்படி எல்லா இடைச் சிறுவனாகவும் மாறினானோ, அதேபோல் கண்ணன் கன்றுக் குட்டிகளாகவும் மாறிவிட்டான். கிருஷ்ணனின் ஆத்ம அழகு பசுக்களின் மனத்தை அடக்கி அவற்றின் ஆத்மாவிலுள்ள சுகத்தை அளித்துவிடுகிறது.*

*கோபிகைகளுக்கு முரளீமோஹன வேணு விலோலன் கண்ணனைப் பார்த்தால் ஏன் அவ்வளவு ஆனந்தம். அவன் சாக்ஷாத் மன்மத மன்மதன். அவனது திவ்ய மங்கள ஸர்வாங்க சுந்தர பேரழகிய ஸ்வரூபத்தை தரிசித்த கோபிகைகளின் மனம் ஊர் சுற்றாமல் அடங்கிவிடுகிறது. பின் சுகத்திற்குக் கேட்பானேன்.*

*கண்ணனின் மேலான இந்த சுந்தர குரு மேனியை நாராயணீயத்தில் ஸ்ரீநாராயண பட்டத்ரி அனுபவிக்கிறார். குருவாயூரப்பனின் அழகு, அழகையேவிட மேலானது. அழகு மிகுந்த அனைத்தையும்விட உயர்ந்த அவரது அழகே அழகு. "ஸௌந்த3ர்யோத் தரதோபி சுந்தர தரம்" என்கிறார்.*

## ப்ரீதி

*எங்கு ப்ரீதி கிடைக்கிறதோ அங்கும் மனம் அடங்கி ஆத்மசுகம் உண்டாகும்.*

*ஜடம்போல் இருந்த குழந்தையை ஆதிசங்கர பகவத்பாதாள் முன் பெற்றோர்கள் வைக்கிறார்கள். இக்குழந்தைதான் பிறகு ஹஸ்தாமலகர் எனும் பிரசித்தமான ஆசார்யாளின் சிஷ்யர். குழந்தையைப் பார்த்தவுடன் அதன் ஆத்ம ஸ்வரூபத்தை உணர்கிறார் குரு. "மத் ப்ரீதயே ப்ரீதி விவர்தனோ அஸி" "உன்னைக்கண்டு மிக்க சுகம் ஏற்படுகிறது. அதை அதிகப்படுத்துவாயாக" என்கிறார்.*

## ரக்ஷா, ஆதரவு

*தனக்கு ஒருவரிடமிருந்து ரக்ஷை அதாவது காப்பாற்றுதல் கிடைக்குமானால் மனம் அடங்கி ஆத்மாவில் தன்மயமாகும்.*

*அரக்கிகளின் இடையே அகப்பட்டுக் கொண்டுள்ள சீதைக்கு ஆஞ்சநேய ஸ்வாமியைப் பார்த்தவுடன் முதலில் சிறிது சந்தேகம் ஏற்பட்டாலும், உடனே முடிவை மாற்றிக்கொண்டு சொல்கிறாள். உன்னைப் பார்த்தால் எனக்கு எவ்வளவு ப்ரீதி உண்டகிறது தெரியுமா? அதனாலேயே நீ என்னை ரக்ஷிக்கவே வந்திருக்கிறாய் எனத் தெளிவாகிறது.*

*மனஸோ ஹி ப்ரீதி:*
*உத்பன்னா தவ த3ர்ஶனாத்*

*(வால்மீகி ராமாயணம், சுந்தரகாண்டம், 34, 18)*

*கெட்ட எண்ணமுடைய ராவணன் மாயையால் இப்படி வந்திருந்தால் அந்த உருவத்திடம் ப்ரீதி ஒருக்காலும் ஏற்படாது என்று சொல்லி ஹனுமாரிடம் சம்பாஷணையைத் தொடர்கிறாள். சீதாதேவிக்கு ப்ரீதி ஏற்பட்டதற்குக் காரணம் இவர் ரக்ஷிப்பார் என்ற நம்பிக்கையில். மனம் ஆத்மாவில் அடங்கி கணவனையே அடைந்துவிட்ட உவகை கொள்கிறாள் ஜானகி. "பர்த்தாரம் இவ ஸம்ப்ராப்தா ஜானகீ முதிதா பவத்" (சுந்தர காண்டம், 36-4)*

*மற்றொரு சிறந்த எடுத்துக்காட்டு பிருஹதாரண்யக உபநிஷத்தில் யாக்ஞவல்க்ய மஹரிஷி மைத்ரேயி மூலம் நமக்கு அளித்த உபதேசம், ஆத்மபோதத்தை அளிக்கிறது.*

*யாக்ஞவல்கியர் சொல்கிறார்:*

*ஹரே மைத்ரேயி! ஒரு கணவன் மனைவியிடம் ப்ரியம் காட்டினால் வெளிப்படையாக அப்படித் தோன்றினாலும் உண்மையில் தன் ஆத்மாவின் சுகத்தை அனுபவிக்கவே மனைவியிடம் பிரியம் வைக்கிறான்.*

*ந வா அரே ஜாயாயை காமாய ஜாயா ப்ரியா ப4வத்ய*
*ந வை அரே ஜாயாயை காமாய ஜாயா ப்ரியா ப4வதி*

*இங்கு மனைவியிடம் அவன் பெறுவது ரக்ஷை, ஆறுதல். உடன் மனம் அடங்கி ஆத்மாவில் லயமாதல். ஆத்ம சுகானுபவம்.*

*அதேபோல் ஒரு மனைவி கணவனிடம் பிரியத்தைக் காண்பித்தால் அது பதிக்காக அல்ல. பதிமூலம் கிடைக்கு ரக்ஷையினால் தன் மனம் அடங்க, ஆத்மசுகம் ஏற்படவே.*

*ந வா அரே பத்யு: காமாய பதி: ப்ரியோ ப4வத்ய*
*ஆத்மனஸ்து காமாய பதி: ப்ரியோ ப4வதி*

*முடிக்கும்போது எல்லாக் காமங்களும் இதற்காகவேதான் என்கிறார் யாக்ஞவல்கியர்.*

*ந வா அரே ஸர்வஸ்ய ஸர்வம் ப்ரிய ப4வத்ய*
*ஆத்மனஸ்து காமாய ஸர்வம் ப்ரியம் ப4வதி*

அதைத்தான் பகவான் ரமணர் சொல்கிறார். ஆனந்தம்/சுகம் எப்படி அடையப்பட்டாலும் அது ஒருவனின் ஆத்மாவினின்றுதான் உணரப்படவேண்டும். வெளியே ஆனந்தம் என்பதில்லை. விருப்பப்பட்ட பொருட்களை வாங்கினாலும், வெறுக்கத்தக்க மனிதர்கட்குக் கேடு வந்தாலும் - நமக்குக் கிடைக்கும் ஆனந்தம் உள்ளேயுள்ள சத், சித், ஆனந்த, உண்மைப்பொருள், உள்ளுணர்விலிருந்தே.

## அடக்கம் விடுபட்ட மனம்

இதுவரை மனம் அடங்கினால் ஏற்படும் ஆத்ம சுகானுபவத்தைப் பார்த்தோம். அடங்கும்போது வாசனைகள், எண்ணங்கள் முதன்முதலாக உண்டாகும் ஜீவாஹந்தையாகிய போலி நான் (அஹங்காரம்), பின் மனது என்ற முறையில் அடங்குகின்றன. மனமே எண்ணங்கள் என்று கூறாமல் வாசனைகளை எண்ணங்களாக மாற்றுவதுதான் மனம் என்கிறார் Talks-இல் பகவான். எண்ணங்களாக அடங்கினாலும் மனதாக அடங்கினாலும் அடக்கம்தான் அங்கு முக்கியம்.

இப்பொழுது தூக்கம், சமாதி, மற்ற நிலைகள் முடிந்தவுடன் என்ன நடக்கிறது?

முதன்முதலாக வருவது ஜீவாகந்தை - அஹங்காரம் ஆன போலி நான், மனத்துடன் சுஷிரம் வழியே இதயத்திற்கு வெளியே வந்துவிடும். பின் எண்ணங்கள் வாசனைகள் புத்தி முதலியன.

போலி நான் ஜீவாஹந்தை தான் ஒவ்வொருவரையும் அஞ்ஞானத்தில் தள்ளி நான் என்று நம்ப வைக்கிறது. இதற்கு சரீராத்ம பாவம் என்று பெயர். இதையும் இது உண்டாகக் காரணமான மனதையும்தான் ஒழித்துக் கட்ட வேண்டும்.

## பௌண்டிரக வாசுதேவன்

ஸ்ரீமத் பாகவத மஹா புராணத்தில் பௌண்டிரக வாசுதேவன் எனும் போக்கிரி, கிருஷ்ண பரமாத்மா மாதிரியே வேஷம் போட்டுக்கொண்டு ஆயுதங்களுடன் "நான்தான் உண்மை கிருஷ்ணன்" என்று கொக்கரித்துக் கொண்டிருந்தான். உண்மை வாசுதேவனாக அட்டகாசம் செய்த போலி வாசுதேவன் கதி என்னாயிற்று? கிருஷ்ண பரமாத்மா அவனை சம்ஹாரம் செய்ததோடு நின்றுவிடாமல் அவன் நண்பன் காசிராஜன் தலையையும் கொய்து அவனது அரண்மனை வாசலில் உருட்டி விட்டார். 'நான் யார்?' விசாரம் செய்தால் அந்தக் கதிதான் போலி நானுக்கும் அதன் நண்பன் மனத்திற்கும் ஏற்படும் என்பது உறுதி.

*நான்ஆர் எனமனம்உள் நாடிஉளம் நண்ணவே*
*நான்"ஆம்" அவன்தலை நாணம்உற - நான்நான்ஆத்*
*தோன்றும்ஒன்று தானாகத் தோன்றினு நான்அன்று பொருள்*
*பூன்றம் அதுதானாம் பொருள்பொங்கித் - தோன்றவே*

**(உள்ளது நாற்பது, 30)**

உடனே தானாகிய உண்மை நான், சித் பொங்கிப் பிரகாசிக்கும்.

**மனதை அடக்கும் வழிமுறைகள்:**

ஆழ்ந்த தூக்கத்தில் மனம் தானாக அடங்கி விடுகிறது. பிராணாயாமம், சமாதிகளில், முயற்சியால் மனம் அடக்கப்படுகிறது. வேறு சுலபமான முறைகளாலும் மனதை அடக்கலாம். அதில் மிக முக்கியமானது ஆசைகளை அடக்குதல். பல எண்ணக்குவியல்களுக்குக் காரணம் அபரிமிதமான ஆசைகளே. ஆசைகள் நிறைவேறாவிட்டால் கோபம் உண்டாகும். அதனால் ஏற்படும் எண்ணங்கள். இவ்வெண்ணங்கள் யாவும் மன விருத்திகளை ஏற்படுத்தும்.

*காம ஏஷ க்ரோத4 ஏஷ:... வித்3த்4யேனமிஹ வைரிணம் (ஶ்ரீமத் பகவத்கீதை, III-37)*

ஶ்ரீமத் பாகவதத்தில் அவதூத கீதையில் பகவான் கிருஷ்ண பரமாத்மா பிங்களை என்பவள் மூலம் நமக்கு அருளிச் செய்வது, “ஆசைதான் மேலான துக்கம். ஆசையின்றேல் சுகமான தூக்கம் கிட்டும்” என்பதே.

*“ஆஶா ஹி பரமம் து3ஹ்க2ம் நைராஶ்யம் பரமம் ஸுக2ம்” “ஸுக2ம் ஸுஷ்வாய பிங்களா” (ஶ்ரீமத் பாகவதம் 11, 8, 44)*

*ஆசை அறுமின்கள் ஆசை அறுமின்கள்*
*ஈசனோ டாயினும் ஆசை அறுமின்கள்*

எனத் திருமூலர் பாடி, துணிச்சலின் எல்லைக்கே போய் விடுகின்றார்,

ஆசையற்ற நிலையில் மனம் அடங்கி விடுவதால் ஆத்மசுக அனுபவம் ஏற்படும்.

அடுத்தது வைராக்கியத்தினாலும் சுகத்தைப் பெறலாம். பத்ம புராணத்தில் கூறப்படுவது இந்திரனுக்கோ சக்ரவர்த்திகளுக்கோகூட சுகம் கிடையாது. ஆனால் வைராக்யம் உள்ள முனிவர்கட்குத் தான் சுகம் என்று,

*ந சேந்திரஸ்ய சுகம் கிஞ்சித் ந சுகம்*
*சக்ரவர்தின: சுகமஸ்தி விரக்தஸ்ய*
*முனே: ஏகாந்த ஜீவின:*

*(பத்ம புராணம், மாஹாத்ம்யம், 4,75)*

வைராக்யத்தினால் தேவைகள் ஆசைகள் அகன்று மனம் அடங்கிவிடும்.

எதையும் சொல்வது சுலபம் செய்வது கடினம். அதனால் எவ்வளவு நம்மால் முடியுமோ அந்த எல்லைவரை போகலாமல்லவா! அதைத்தான் ஶ்ரீமத் பாகவதத்தில் உத்தவ கீதை வாயிலாக நமக்கு அனுக்ரஹிக்கிறார் கீதாசார்யர். உன்னால் எவ்வளவு முடியுமோ அவ்வளவு செய்; “வார்த்தைகளை

அடக்கு; மனதை அடக்கு; பிராணனைகளை அடக்கு; இந்திரியங்களை அடக்கு; சரீரத்தை அடக்கு; உனக்கு பிறப்பிறப்பில்லா மோக்ஷம் கிட்டிவிடும். விடுதலை என்றால் சுகம்தானே.

*வாசம் யச்ச மனோ யச்ச ப்ராணான் யச்ச*
*இந்திரியாணி ச*
*ஆத்மானம் ஆத்மனா யச்ச ந பூயோ*
*கலபஸே த்வனினே (ஸ்ரீமத் பாகவதம், 11,16,42)*

அத்துடன் 'மன்தவ்ய' என்று நாம் அடிக்கடி நினைக்க வேண்டியது ஒன்று உண்டு. அதுதான் "நான் இந்த சரீரமோ, மனமோ, அகந்தையோ அல்ல. நித்ய சுத்த புத்தமுக்த பூர்ண வஸ்துவான பிரும்மம், ஆத்மா, ஆனந்தமயம் என்பதே.

நான் யார் தெரியுமா? "நான் பிரும்மம், நான் ஆத்மா, நான் உணர்வு, நான் ஆனந்தம், நான் சுகம்" என்ற உண்மையை மனனம் செய்துகொண்டே இருக்கவேண்டும்.

*அஹம் பிரும்மாஸ்மி*
*அஹம் ஸுகமஸ்மி*
நானே பிரும்மம் - நானே சுகம்.

# இனிவரும் திருநாட்கள்

## 2022

| | | | |
|---|---|---|---|
| ஏப்ரல் | 28 | வியாழன் | ஸ்ரீபகவானது 72ஆவது ஆராதனை |
| மே | 7 | சனி | மஹா பூஜை |
| ஜூலை | 10 | ஞாயிறு | பசு லக்ஷ்மி தினம் |
| | 13 | புதன் | குரு பூர்ணிமா |

# செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

### மஹா சிவராத்திரி (1-3-2022)

*மஹா சிவராத்திரி விழாவினை முன்னிட்டு 1-3-2022 செவ்வாய்க்கிழமை மாலை 6 மணி முதல் 2-3-2022 அன்று காலை 6 மணிவரை சிறப்பு அபிஷேகம் மற்றும் பூஜைகள் ஸ்ரீரமணாச்ரமத்தில் நடைபெற்றன. மஹா சிவராத்திரி நிகழ்வுகள் அனைத்தும் ஸ்ரீரமணாச்ரம YouTube Channel-இல் நேரலை ஒளிபரப்பு செய்யப்பட்டது.*

*இந்த மஹாசிவராத்திரி நன்னாளில் பெருந்திரளான அன்பர்கள் கண்விழித்து கிரிவலம் செய்த வண்ணமிருந்தனர். ஆச்ரம பூஜைகளிலும் அன்பர்கள் இரவு முழுவதும் கண்விழித்து பூஜையில் பங்கு கொண்டனர்.*

### T R கனகம்மாள் நூற்றாண்டு நினைவு நாள்

### (13-3-2022, ஞாயிற்றுக்கிழமை, புனர்வசு நாள்)

*ஸ்ரீபகவானது பக்தையும் பகவானைப் பற்றி பல நூல்களை எழுதியவருமான ஸ்ரீமதி T.R. கனகம்மாள் அவர்களின் நூற்றாண்டு நினைவுநாள் ஸ்ரீ ரமணாச்ரம நூலக மண்டபத்தில் 13 மார்ச் அன்று மாலை 03-30 முதல் 05-00 மணிவரை சிறப்பாகக் கொண்டாடப்பெற்றது.*

*'ஸ்ரீ ரமண சந்நிதிமுறை' சிறப்புப் பாராயணத்துடன் துவங்கிய இந்நிகழ்வில் கனகம்மாளின் நேர்காணல் காணொலி திரையிடப்பட்டது. பின்னர் அன்பர்கள் அவரைப் பற்றிய நினைவு நிகழ்வுகளைப் பகிர்ந்து கொண்டார்கள் .*

*திரளாக ரமணா அன்பர்கள் கலந்துகொண்ட இந்நிகழ்விற்கு திருமதி. சுசீலா சுந்தர ரமணன் (சுசீலா மன்னி) அவர்கள் தலைமை வகித்து நடத்தி வைத்தார்கள்.*

*ஸ்ரீரமணாச்ரமத்திற்குப் பாத்தியப்பட்ட ரமணாலயம், குரோம்பேட்டையில் புனர்வசு விழாவுடன், கனகம்மா அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழா கொண்டாடப் பட்டது. சிறப்புப் பாராயணத்துடன் துவங்கிய இவ்விழாவில் திருவாளர்கள் முரளி மற்றும் குமார் ராஜா ஆகியோர் கனகம்மா அவர்களைப் பற்றிய தங்களது நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்கள்.*

## ஸ்ரீவித்யா ஹோமம்

## (8-4-2022, வெள்ளிக்கிழமை)



*ஆண்டுதோறும் ஸ்ரீ ரமணாச்ரமத்தில் நடைபெற்று வரும் ஸ்ரீ வித்யா ஹோமம், இவ்வாண்டு 8-4-2022, வெள்ளிக்கிழமையன்று வெகு சிறப்பாக நடந்தேறியது.*

*காலை 7 மணிக்குத் துவங்கி மாலை 3 மணி வரை நடைபெற்ற ஹோமத்தில், நவாவர்ண பூஜை, ஹோமம், சுமங்கலி பூஜை, கன்யா பூஜைகளுடன் பூர்ணாஹுதி மற்றும் தீபாராதனை நடைபெற்றது. பின்னர் கலசங்களில் தீர்த்தங்கள் கொண்டு செல்லப்பட்டு தாயார் சந்நிதியில்*

*அமைந்துள்ள ஸ்ரீ சக்ர மேருவிற்கு அபிஷேகம் செய்யப்பட்டு, பின்னர் தீபாராதனையும் நடைபெற்றது.*



*பெருந்திரளான அன்பர்கள் ஹோமத்தில் கலந்து கொண்டனர். அனைவருக்கும் பிரசாதம் அளிக்கப் பட்டது.*

## ஸ்ரீபகவான் ஆராதனை விழா

## (28-4-2022, வியாழக்கிழமை)

*பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 72-ஆவது ஆராதனை விழா இவ்வாண்டு ஏப்ரல் மாதம் 28-ஆம் தேதியன்று கொண்டாடப்பட உள்ளது. விழாவில் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் மற்றும் பூஜைகள் நடைபெறும்.*

*ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு பாத்தியப்பட்ட மதுரை ரமண மந்திரம், ராமனாதபுரம் முருகனார் மந்திரம் மற்றும் சென்னை ரமணாலயம் ஆகிய இடங்களிலும் ஆராதனை விழா கொண்டாடப்படும்.*

# ரமண கேந்திர செய்திகள்

## ஸ்ரீபகவானது 72-ஆவது ஆராதனை விழா

## ஸ்ரீரமண கேந்திரம், சென்னை

*திரு. அனந்தசாமி நினைவு ஹாலில் 28-4-2022 காலை 07.00 முதல் மதியம் 11.30 வரை மங்கல இசையுடன் ஏகாதச ருத்ர பாராயணம், பகவான் ரமணரின் பாதுகைக்கு அபிஷேகம், தமிழில் அருணாசல அக்ஷரமணமாலை மற்றும் சிறப்புப்*

*பூஜைகளுடன் நடைபெறும். பங்குபெரும் அனைவர்க்கும் மதியம் 11.30 மணிக்கு அன்னப் பிரசாதம் வழங்கப்படும். அனைவரும் கலந்து கொள்ளலாம்.*

## ரமணாலயம், குரோம்பேட்டை, சென்னை (பகவான் ஆராதனை விழா, 28-4-2022)

*ஸ்ரீ ரமணாச்ரமத்திற்குப் பாத்தியப்பட்ட ரமணாலயம், குரோம்பேட்டையில் ஸ்ரீபகவானது 72-ஆவது ஆராதனை விழா சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது.*

*காலை 08.00 மணிக்கு வேத பாராயணம், 09.00 மணிக்கு ஸ்ரீ ரமணா அஷ்டோத்ர பூஜை, 09.30-க்கு 'திருவாசக செந்நாவலர்' திரு. மயிலை சத்குருநாத ஓதுவார் அவர்கள் பக்கவாத்தியங்களுடன் 'ஸ்ரீ ரமண சந்நிதிமுறை' பண்ணிசை மற்றும் 11.00 மணியளவில் அக்ஷரமணமாலை பாராயணம் நடைபெற உள்ளது. 11.30 மணிக்கு அனைவர்க்கும் அன்னப் பிரசாதம் வழங்கப்படும்.*

*அனைவரும் கலந்து கொள்ளலாம்.*

## ரமண சரண தீர்த்தர் திரு. நொச்சூர் வெங்கட்ராமன் அவர்களின் பிரசங்கங்கள்

இடம்: *நாரத கான சபை T.T.K சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை.*

*'ரமண சரண தீர்த்தர்' திரு. நொச்சூர் வெங்கட்ராமன் அவர்கள் கீழ்க்கண்ட தலைப்புக்களில் பிரவசனம் செய்ய உள்ளார்.*

*பாகவத தரிசனம் 17-23 ஜூலை 2022 மாலை 06.30-0830 PM*

*தேவி காலோத்தரம் 18-23 ஜூலை 2022 காலை 07.00-0800 AM*

*தொடர்பு PROF. அனந்தராமன் 9840428506*

## தொடரும் நன்கொடையாளர்கள்

திருமதி. *சரஸா ரங்கநாதன்,* திருவண்ணாமலை ₹*25000*

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், | | |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | ......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | ......... | 9940418375 |
| ***குரோம்பேட்டை****, ரமணாலயம்* | ........ | 9444261296 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | ........ | 22244667 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | ........ | 23716495 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | ........ | 9444172623 |
| ***புதுச்சேரி*** *ரமண கேந்திரம்* | ........ | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | ...... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | ........ | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | ........ | 9442004615 |
| ***மலையாண்டிபட்டினம்*** பாலசுப்பிரமணியம் | ........ | 9965622878 |
| ***பொள்ளாச்சி*** ரமண குமார் | .......... | 9487016880 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | ........ | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | ........ | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | ........ | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | ....... | 9787180757 |
| ***திண்டுக்கல்*** பழ. முத்தையா | ......... | 9443070924 |
| ***திண்டுக்கல்*** ரமண பாரதி | ......... | 9994042091 |
| ***பூண்டி*** மாரியப்பன் | ......... | 9486576687 |

Ramanodhayam — Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.



# திருமதி. கனகம்மாள்

22/2/1922 – 01/01/2010

திருமதி. கனகம்மாள் அவர்களின்
நூற்றாண்டு பிறந்தநாள் விழா
புனர்வசு நன்னாளன்று (13/3/2022) கொண்டாடப்பட்டது.
இவர் எழுதிய நூல்கள்:
ஸ்ரீ முருகனார், நினைவில் நிறைந்தவை, பகவானது
நூற்றிரட்டு உரை நூல்கள் இரண்டு பாகங்கள்.

Registered with the Registrar of Newspaper for India RNI No.: TNTAM/2001/5542

